# பேனா குரல்

# PENA KURAL

தமிழ் மாத இதழ்

Tamil Monthly


மலர்: 01 | இதழ்: 09 | ஜூலை 2023 | விலை: ₹ 20/- | ஆண்டு சந்தா: ₹ 240/- | சென்னை

Volume: 01 | Issue: 09 | July 2023 | Price: ₹ 20/- | Annual Aubscription: ₹ 240/- | Chennai





## பிரான்சில் திருவள்ளுவர் சிலை!

தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த்த


பிரதமர் மோடி

## விண்ணில் பாய்ந்தது

## இந்தியாவின் பெருமை

# சந்திரயான்-3


www.penakural.com


Ministry of Education
Government of India
Azadi Ka Amrit Mahotsav
PM SHRI
PM ScHools for Rising India
Empowering students with 21st century skills
More than 14500 Schools across the country to emerge as Exemplar Schools
Centrally sponsored scheme (PM SHRI Schools) will be for a period of 5 Years i.e. 2022 - 2027
PM SHRI schools will showcase all the components of NEP 2020
Total project cost - Rs. 27360 crore over a period of 5 years
Total Central share will be Rs. 18128 crore
@EduMinOfIndia
@EduMinOfIndia
HRDMinistry
@eduminofindia


PM SHRI Yojana
PM announces
Pradhan Mantri Schools for Rising India
PM-SHRI YOJANA
Development & Upgradation of 14,500 schools across country
Development of 'Model Schools', encapsulating full spirits of NEP

# பேனா குரல்
PENA KURAL
R.Dis. No.: 939/2022 தமிழ் மாத இதழ்
மலர்: 01 இதழ்: 09 ஜூலை 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-


ஆசிரியர் குரல்

தலையங்கம்

# இந்தியாவின் பெருமை சந்திரயான் - 3

நாட்டின் சமூக-பொருளாதார நன்மைக்காக விண்வெளி ஆய்வு, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தை பெறுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. செயற்கைகோள் உதவியுடன் தகவல் தொடர்பு, தொலைக்காட்சி ஒளிபரப்பு, வானிலை மற்றும் பேரிடர் தகவல்களை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கும், பூமி மற்றும் வளங்கள் கண்டறிதல் போன்ற பல மேலாண்மை தகவல்களை பெறவும் முடிகிறது. விண்ணில் ஏவப்படும் செயற்கைகோள்கள் மூலம் காலநிலை மாற்றம் உள்பட வியத்தகு பல ஆய்வுகள், தகவல்கள் கிடைக்கின்றன. கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடலில் எந்த இடங்களில் மீன்கள் அதிகமாக கிடைக்கும் என்பதைக்கூட செயற்கைகோள் மூலம் கண்டறிய முடியும். இந்தியாவின் முதல் செயற்கைகோளான ஆர்யபட்டா, புவி ஆராய்ச்சிக்காக சோவியத் யூனியனால் 1975-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ந்தேதி விண்ணில் ஏவப்பட்டது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் என்று சொல்லப்படும் இஸ்ரோ நிறுவனம், 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ந்தேதி சுதந்திர தினத்தன்று தொடங்கப்பட்டது.

ராக்கெட்டுகள் சென்னையை அடுத்த ஆந்திராவில் இருக்கும் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2 ஏவுதளங்கள் மூலமாகத்தான் அனுப்பப்படுகின்றன. இங்கிருந்து விண்வெளிக்கு, இந்தியாவுக்காக அனுப்பப்பட்ட செயற்கைகோள்களில் தற்போது 56 செயற்கை கோள்கள் பூமியை சுற்றி வலம் வந்து கொண்டிருப்பது மட்டுமல்லாமல், பயனுள்ள பல தகவல்கள், படங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றன. விண்வெளி ஆய்வில் சிறந்து விளங்கும் நாடுகளின் பட்டியலில், அமெரிக்கா, ரஷியா, சீனா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் இருக்கின்றன. இந்த நிலையில், விண்வெளியை சுற்றி மட்டுமல்லாமல், நிலவில் கால் பதிப்பதோடு, அங்கு இருந்து பூமியையும் ஆய்வு செய்யும் பணியில் விண்கலன்களை அனுப்பும் முயற்சியில் இஸ்ரோ இறங்கியுள்ளது.

இந்த வகையில், சந்திரயான் -1 என்ற விண்கலம் 2008-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ந்தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து நிலவை சுற்றிவர அனுப்பப்பட்டது. அது நிலவில் நீர் இருப்பதை ஊர்ஜிதப்படுத்தியது. அடுத்த விண்கலமான சந்திரயான்-2, 2019-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ந்தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அனுப்பப் பட்டது. இந்த விண்கலம் நிலவில் தரையிறங்கி, அங்குள்ள வளங்கள் குறித்து ஆய்வு நடத்துவதற்காக அனுப்பப்பட்டது. வெற்றிகரமாக இது விண்ணில் செலுத்தப்பட்டாலும், திட்டமிட்டபடி நிலவில் இறங்குவதில் சிக்கல் ஏற்பட்டு தோல்வியில் முடிந்தது.

அப்போது ஏற்பட்ட குறைபாடுகளை ஒரு பாடமாகக் கொண்டு, சற்றும் மனம் தளராமல் இஸ்ரோ இப்போது ரூ.615 கோடி செலவில் சந்திரயான்-3 விண்கலத்தை உருவாக்கி இன்று மதியம் விண்ணில் ஏவப்போகிறது. இந்த விண்கலம் நிலவு பற்றிய ஆய்வு மட்டுமல்லாமல், அங்கு இருந்து பூமியிலுள்ள வளங்கள் மற்றும் பல ஆய்வுகளை மேற்கொள்ளும். இதுவரை நிலவின் தென் துருவத்தில் உலகில் எந்த நாடும் கால் பதிக்காத நிலையில், இந்தியாவின் இந்த முயற்சியில் விண்கலத்தின் லேண்டர் நிலவில் இறங்குவதை உலகமே ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

அந்தவகையில், சந்திரயான்-3 உள்பட மற்ற 2 சந்திரயான்களுமே இந்தியாவுக்கு பெருமை சேர்ப்பது மட்டுமல்லாமல், சரித்திரம் படைக்கிறது. இதில் தமிழ்நாட்டுக்கு மிகப்பெரிய பெருமை, பூரிப்பு என்னவென்றால், சந்திரயான் 1-க்கு மயில்சாமி அண்ணாதுரை, சந்திரயான் 2-க்கு வனிதா முத்தையா, சந்திரயான் 3-க்கு வீரமுத்துவேல் என்று 3 சந்திரயான்களின் திட்ட இயக்குனர்களுமே தமிழர்கள்தான்.

– **ராதிகா சிவசங்கர், ஆசிரியர்**

# பிரான்சில் திருவள்ளுவர் சிலை!

## தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பிரதமர் மோடி


தலைநகர் பாரீஸ் சென்ற பிரதமர் மோடியை பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்ன் வரவேற்றார். ஏராளமான இந்திய வம்சாவளியினரும் அவரை உற்சாகத்துடன் வரவேற்றனர். இதைத்தொடர்ந்து பாரீசில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் பிரதமர் மோடி உரையாற்றினார்.

வெளிநாட்டில் பாரத் மாதா கீ ஜே என்கிற முழக்கத்தை கேட்கும் போது நான் சொந்த மண்ணில் நிற்பது போல் உணர்கிறேன். நான் பல முறை பிரான்ஸ் வந்துள்ளேன். ஆனால் இந்த முறை எனது வருகை சிறப்பானது. இன்று பிரான்சின் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. பிரான்ஸ் மக்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். என்னை அழைத்த பிரான்ஸ் மக்களுக்கு நன்றி. இது இந்தியாவுக்கும், பிரான்சுக்கும் இடையிலான பிரிக்க முடியாத நட்புறவின் பிரதிபலிப்பாகும்.

இன்று உலகம் புதிய பாதையை நோக்கி நகர்கிறது. இதில் இந்தியாவின் பங்கும் கூட மிக வேகமாக மாறி வருகிறது. இந்தியா தற்போது ஜி 20 கூட்டமைப்பின் தலைமையை ஏற்றுள்ளது. இந்தியாவின் சந்திரயான் விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான கவுண்ட்டவுன் பணி தொடங்கி இருக்கிறது. இன்னும் சில மணி நேரங்களில் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து வரலாற்று சிறப்பு மிக்க சந்திரயான் 3 விண்கலத்தை விண்ணில் செலுத்த இருக்கிறோம்.

பருவநிலை மாற்றம், பயங்கரவாதம் அல்லது பயங்கரவாத எதிர்ப்பு என எதுவாக இருந்தாலும் உலகம் இந்தியாவையே உற்றுப்பார்க்கிறது. எந்தவொரு சந்தர்ப்பத்தையும் நாம் நழுவ விட மாட்டோம். ஒவ்வொரு நேரத்தையும் வீணாக விட மாட்டோம் என்று இந்தியா தீர்மானித்துள்ளது.

எனது ஒவ்வொரு நொடியும் நமது நாட்டு மக்களுக்கானது என தீர்மானித்துள்ளேன். அடுத்த 25 ஆண்டுகளில் ஒரு வளர்ந்த நாடாக



மாறும் நோக்கில் இந்தியா செயல்படுகிறது. இந்தியாவுக்கு ஒரு பிரகாசமான இடம் இருக்கிறது என்று சர்வதேச நிறுவனங்கள் கூறுகின்றன. இந்தியாவில் முதலீடுகளுக்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

பிரான்சில் முதுகலை படிக்கும் இந்திய மாணவர்களுக்கு 5 ஆண்டுகள் நீண்ட கால படிப்புக்குபிந்தைய விசா வழங்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்தியர்கள் இனி பிரான்சில் யு.பி.ஐ. பேமெண்ட் முறையை பயன்படுத்த இந்தியாவும், பிரான்சும் ஒப்புக்கொண்டு உள்ளன. இனி ஈபிள் கோபுரத்தில் இருந்து இந்திய சுற்றுலாப்பயணிகள் இந்திய ரூபாய்களில் கட்டணங்களை செலுத்த முடியும்.

**பிரான்சில் 7 அடி உயரத்தில் திருவள்ளுவருக்கு சிலை- பிரதமர் மோடி அறிவிப்பு:**

ஐக்கிய நாடுகள் சபை அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் 10 முதல் 15 ஆண்டுகளில் 42 கோடி இந்தியர்கள் வறுமை கோட்டுக்கு கீழ் இருந்து மேலே கொண்டு வரப்பட்டு உள்ளனர் என கூறி இருக்கிறது. இந்த எண்ணிக்கை ஐரோப்பியாவின் மக்கள் தொகையை விட அதிகமாகும்.



அமெரிக்காவின் மக்கள் தொகையை விட அதிகம் உலகின் பழமையான மொழி தமிழ். உலகின் மிகப்பழமையான மொழி இந்திய மொழி என்பதில் மிகப்பெரிய பெருமை எனக்கு உண்டு.

பிரான்ஸ் நாட்டில் இந்தியாவின் சார்பில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும். பிரான்சில் திருவள்ளுவர் சிலையை அமைப்பது இந்தியாவுக்கு கிடைத்த பெருமை.

100 ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சுக்கான யுத்தத்தில் இந்திய வீரர்கள் ஈடுபட்டனர். பிரெஞ்சு மண்ணில் நிகழ்ந்த யுத்தத்தில் பங்கேற்று பிரெஞ்சு மண்ணில் இந்திய வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இங்கு நடந்த போரில் பங்கேற்ற படைப்பிரிவுகளில் ஒன்றான பஞ்சாப் ரெஜிமென்ட் பிரான்சின் தேசிய தின அணிவகுப்பில் பங்கேற்க உள்ளது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

பிரான்சில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்ததும் அங்கு இருந்து இந்திய வம்சாவளியினர் பலத்த கரவொலி எழுப்பினார்கள்.

பிரதமர் மோடி அறிவித்துள்ள திருவள்ளுவர் சிலையை புதுவையைச் சேர்ந்த சிற்ப கலைஞர் முனுசாமி வடிவமைத்து உள்ளார். இந்த சிலை வெண்கலத்தில் 7 அடி உயரத்தில் 600 கிலோ எடை யில் உருவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு திருவள்ளுவர் சிலை பிரான்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டது.

பிரான்சில் உள்ள தமிழ் கலாசார மன்றம், பிரான்ஸ் அரசு அனுமதியுடன் பாரீஸ் அருகே செர்ஜி நகரத்தில் உள்ள மைய பூங்கா வளாகத்தில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட உள்ளது. இந்த சிலையை பிரதமர் மோடி இன்று பார்வையிட உள்ளார்.

பாரீசில் இன்று பிரமாண்ட தேசிய தினவிழா நடைபெறுகிறது. இதில் சிறப்பு விருந்தினராக பிரதமர் மோடி கலந்து கொள்ள இருக்கிறார், அவர் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் சேர்ந்து அணி வகுப்பினை பார்வையிடுகின்றனர்.

இந்த அணிவகுப்பில் இந்திய முப்படைகளை சேர்ந்த 269 அதிகாரிகள் மற்றும் வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். பிரான்சிடம் இருந்து வாங்கப்பட்ட ரபேல் போர் விமானங்களும் பிரான்ஸ் விமாப்படையுடன் இணைந்து சாகசங்களில் ஈடுபட உள்ளன. இந்திய கடற்படையின் ஐ.என். எஸ். சென்னை போர்க்கப்பலும் இந்த தேசிய தின விழா அணிவகுப்பில் பங்கேற்கின்றன.

இந்த நிகழ்ச்சி முடிந்ததும் இருநாட்டு தலைவர்களும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். பாதுகாப்பு, கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்கின்றனர்.

மேலும் பிரான்சிடம் இருந்து இந்திய கடற்படைக்காக 26 ரபேல் போர் விமானங்கள் வாங்குவதற்கான முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. பிரான்ஸ் தொழில்நுட்ப உதவியுடன் மும்பை மலே கான் கப்பல் கட்டும் தளத்தில் 3 ஸ்கார்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்களை தயாரிப்பதற்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகிறது.

இந்தியாவில் மிகவும் வெற்றிகரமானதாக இருக்கும் யுபிஐ தொழில்நுட்பத்தை பிரான்ஸ் நாட்டிலும் அறிமுகப்படுத்த உள்ளதாக அப்போது பிரதமர் மோடி தெரிவித்தார். அங்கே பேசிய பிரதமர் மோடி, “பல மணி நேரம் பயணித்து என்னைக் காண வந்திருக்கும் இந்தியர்களுக்கு நன்றி.. நாம் எங்குச் சென்றாலும் அங்கே மினி இந்தியாவை உருவாக்குவோம். உங்களால் தான் இந்தியா- பிரான்ஸ் கூட்டாண்மை வலுப்பெறுகிறது.

காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவது, சர்வதேச வினியோக சங்கிலி, பயங்கரவாதத்தை

எதிர்த்துப் போராடுவது ஆகியவற்றில் இந்தியாவின் அனுபவம் உலகிற்கு உதவியாக உள்ளது. இந்தியாவும் பிரான்சும் நீண்ட காலமாகத் தொல்பொருள் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. இது உண்மையில் மிகச் சிலருக்கே தெரியும். சண்டிகரில் இருந்து லடாக் வரை பல இடங்களை ஆய்வுகளை நடத்தியுள்ளோம்.

**யுபிஐ:** இந்தியா மற்றும் பிரான்ஸ் இடையேயான உறவுகளை வலுப்படுத்தும் மற்றொரு துறையாக டிஜிட்டல் உள்கட்டமைப்பு இருக்கிறது. இந்தியாவும் பிரான்சும் இணைந்து பிரான்ஸ் நாட்டில் யுபிஐ தொழில்நுட்பத்தைக் கொண்டு வர ஒப்புக்கொண்டுள்ளன. வரும் நாட்களில், இது ஈபிள் கோபுரத்தில் இருந்து தொடங்கும், அதாவது இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இப்போது ரூபாயில் பணத்தைச் செலுத்த முடியும்'' என்று அவர் தெரிவித்தார்.

பிரான்ஸ் நாட்டில் யுபிஐ தொழில்நுட்பத்தை அனுமதிப்பது என்பது ரொம்பவே முக்கியமானதாக இருக்கும். யுபிஐ வந்துவிட்டால் அங்கே சுற்றுலா செல்லும் இந்தியர்கள் செலவு செய்ய ஒவ்வொரு முறையும் பணத்தை வெளியே எடுக்க வேண்டிய கட்டாயம் இல்லாமல் போகும்.

**யுபிஐ முறை:** யுபிஐ சேவை என்பது இந்தியாவில் ரொம்பவே பிரபலமானதாகும். இதன் மூலம் பல வங்கிக் கணக்குகளை ஒரே மொபைல் செயலியில் இருந்து அணுக முடியும். நீங்கள் வேறு வேறு வங்கியில் வங்கிக் கணக்கை வைத்திருந்தாலும் ஒரே ஒரு செயலி இருந்தால் போதும். மிக எளிதாக ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்குப் பணம் அனுப்ப முடியும் என்பதால் பலரும் இதைத்தான் ஆர்வமாகப் பயன்படுத்துகின்றனர்.

இதைப் பயன்படுத்தக் கூடுதலாக எந்தவொரு கட்டணமும் இல்லை என்பதால் பலரும் யுபிஐ முறையை ஆர்வமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

என்சிபிஐ எனப்படும் நேஷனல் பேமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, கடந்த 2016 ஏப்ரல் 21ஆம் தேதி சோதனை முறையில் இந்த யுபிஐ முறையை அறிமுகப்படுத்தியது. அதன் பின்னர், யுபிஐ பயன்பாடு மின்னல் வேகத்தில் வளர்ந்துவிட்டது. ரூ. 5, 10 ரூபாய்க்குக் கூட இப்போது வியாபாரிகள் யுபிஐ மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் யுபிஐ மூலம் பரிவர்த்தனை செய்யப்படும் தொகை உச்சத்தைத் தொட்டு வருகிறது.



**உலக நாடுகள்:** கடந்த 2022இல், இந்தியாவில் யுபிஐ முறையை அறிமுகப்படுத்திய என்சிபிஐ பிரான்ஸ் நாட்டின் வேகமான மற்றும் பாதுகாப்பான ஆன்லைன் பேமெண்ட் முறையான Lyra உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதேபோல இந்த ஆண்டு, யுபிஐ மற்றும் சிங்கப்பூரின் பேநவ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் இரு நாட்டு மக்களும் பணத்தை எளிதாக அனுப்பிக் கொள்ளலாம்.

அதேபோல ஐக்கிய அமீரகம், பூடான், நேபாளம் நாடுகளும் யுபிஐ முறையை ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டது. இது மட்டுமின்றி யுபிஐ அமெரிக்காவில் அறிமுகப்படுத்துவது குறித்தும் இப்போது பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

- **தமிழ் வீரன்**

# பிரமரின் மத்ஸய சம்பதா திட்டத்தின் கீழ், மீன் நோய்கள் பற்றி விரைவாகப் புகாரளிப்பதற்கு மொபைல் செயலி உருவாக்கம்

விலங்கு புரதம் மற்றும் ஒமேகா 3-கொழுப்பு அமிலங்களின் ஆரோக்கியமான ஆதாரங்களில் ஒன்றாக மீன் கருதப்படுகிறது. ஊட்டச்சத்து குறைபாட்டைத் தணிக்க மகத்தான ஆற்றலை வழங்குகிறது. மீன் வளர்ப்பு வேகமாக வளர்ந்து வரும் உணவு உற்பத்தித் துறைகளில் ஒன்றாகும். புரதத்திற்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது. மீன்வளத்துறை நாட்டில் உள்ள சுமார் 3 கோடி மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தையும் வேலை வாய்ப்பையும் வழங்குகிறது. இத்துறையின் வளர்ச்சிக்கான அபரிமிதமான சாத்தியக்கூறுகளை முன்னறிவித்து, நீலப் புரட்சியைக் கொண்டுவருவதற்காக, மத்திய அரசு, ரூ 20,050 கோடி முதலீட்டுடன் பிரதமரின் மத்ஸய சம்பதா திட்டம் என்ற முதன்மைத் திட்டத்தை அறிவித்துள்ளது.

மீன் வளர்ப்பின் வளர்ச்சிக்கு நோய்கள் கடுமையான தடையாக உள்ளது, நீர்வாழ் விலங்கு நோய்களால் விவசாயிகளால் பெரும் பொருளாதார இழப்புகள் பதிவாகியுள்ளன. ஆரம்பகால கண்டறிதல் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு முக்கியமாகக் கருதப்படுகிறது. நோய் கண்காணிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அமைச்சகம், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் ஆகியவற்றின் மூலம் நீர்வாழ் விலங்கு நோய்களுக்கான ஒரு லட்சிய தேசிய கண்காணிப்புத் திட்டம் ஆதரிக்கப்பட்டது. இந்தத் திட்டம் மீன் வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்த 14 மாநிலங்களில் தொடங்கப்பட்டது .

பிப்ரவரி 27, 2023 அன்று சென்னையில் மத்திய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா அவர்களால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக தொடங்கப்பட்டது.




விவசாயிகளை மேலும் வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ், "மீன் நோயைப் புகாரளி" என்ற செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலி சமீபத்தில் ஜூன் 28, 2023 அன்று மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா அவர்களால் தொடங்கப்பட்டது. புதுமையான செயலியைப் பயன்படுத்தி, விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் உள்ள மீன், இறால் மற்றும் மொல்லஸ்க்களில் ஏற்படும் நோய்களைக் கள மட்ட அலுவலர்கள் மற்றும் மீன் சுகாதார நிபுணர்களிடம் தெரிவிக்கலாம் மற்றும் தங்கள் பண்ணைகளில் ஏற்படும் நோய் பிரச்சனையை விரைவாகத் தீர்க்க அறிவியல் ஆலோசனைகளைப் பெறலாம். மீன் விவசாயிகள், கள அளவிலான அதிகாரிகள் மற்றும் மீன் சுகாதார நிபுணர்களை இணைக்கும் மைய தளமாக இந்த செயலி இருக்கும்.

- K. **மாரிதுரை**

# இந்தியாவுக்கு பெருமைச் சேர்த்த தமிழ்நாட்டு பழங்குடி இளைஞர்கள்:

## பிரிட்டன் மன்னரிடம் விருது பெற்று அசத்தல்!



நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த இரண்டு பழங்குடி இளைஞர்களுக்கு மதிப்புமிக்க மார்க் ஷாண்ட் விருது அளிக்கப்பட்டுள்ளது. பெட்டா குரும்பா பழங்குடி சமூகத்தை சேர்ந்த ரமேஷ் மாறன் (32), விஷ்ணு வர்தன் (29) ஆகியோருக்கு இங்கிலாந்து மன்னரும் மகாராணியும் விருதினை அளித்து சிறப்பித்துள்ளனர்.

**இந்தியாவுக்கு பெருமைச் சேர்த்த தமிழ்நாட்டு பழங்குடி இளைஞர்கள்:**

லந்தனா கேமரா என்ற தாவர இனத்தில் இருந்து முழு உருவ யானை சிலைகளை உள்நாட்டு கைவினை கலைஞர்கள் செய்து வருகின்றனர். அவர்கள் அனைவரையும் கௌரவிக்கும் விதமாக ரமேஷ், விஷ்ணு ஆகியோருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ குறிப்பிடுகையில், "மாநிலத்தின் பழங்குடியினருக்கு இத்தகைய அங்கீகாரம் கிடைத்ததைக் கண்டு தமிழ்நாடு அரசு மகிழ்ச்சி அடைகிறது. மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான பழங்கால பந்தம் பரவலாகக் கொண்டாடப்பட வேண்டும்.

இந்த பன்முகத் திட்டம் காடுகளில் இருந்து லந்தனா தாவரத்தை அழிக்கிறது. பழங்குடி மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. மேலும், மனித–வனவிலங்குகளின் சகவாழ்வைக் கொண்டாடுகிறது. லந்தனா யானைகள் விரைவில் மாநிலம் முழுவதும் கொண்டு செல்லப்பட்டு மக்கள் முன் காட்சிக்கு வைக்கப்படும்" என ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

**ஆக்கிரமிப்பு தாவரங்களை கொண்டு கைவினை பொருள்கள்:**

இந்தியாவில் உள்ள ரியல் எலிஃபண்ட் கலெக்டிவ் என்ற தன்னார்வ நிறுவனம், பிரிட்டன் தொண்டு நிறுவனத்துடன்

இணைந்து புகழ்பெற்ற 'லந்தனா யானைகளை' தயாரித்து வருகிறது.

சுற்றுச்சூழலில் இருந்து ஆக்கிரமிப்பு உயிரினங்களை அகற்றுவதுடன், இந்த கைவினை பொருள்கள், வனத்தை சார்ந்துள்ள சமூகங்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதோடு, மனித–வனவிலங்குகளின் வாழ்வை மேம்படுத்தவும் உதவுகின்றன.

தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் உள்ள சுமார் 120 பழங்குடியினர், லந்தானா யானைகள் மற்றும் பிற கைவினைப்பொருட்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த திட்டத்தில் பணிபுரிந்து கடந்த 5 ஆண்டுகளில் 3.5 கோடிக்கு மேல் வருமானம் ஈட்டியுள்ளனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு, மத்திய லண்டன் பூங்காவில் 125 லந்தனா யானை சிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. மனித–வனவிலங்கு வாழ்வு மேம்பாட்டுக்காக 250க்கும் மேற்பட்ட லந்தனா யானைகள் ஏலம் விடப்பட்டு, நிதி திரட்டப்பட உள்ளது.

லந்தானா யானை கண்காட்சிகளில் இருந்து திரட்டப்படும் நிதியானது, இந்தியாவில் உள்ள மனித–வனவிலங்குகளின் சகவாழ்வை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குத் துணைபுரிகிறது. மனித–வனவிலங்கு வாழ்வு குறித்து இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த பயிற்சி வகுப்புகளை எடுக்கவும் இந்த நிதி பயன்படுகிறது.

பெங்களூருவில் உள்ள பல்திறன் பல்கலைக்கழகம், இந்த பயிற்சி வகுப்புகளை எடுத்து வருகிறது. இந்தியாவில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு லந்தனா யானைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ரியல் எலிஃபண்ட் கலெக்டிவ் தன்னார்வ நிறுவனம், ரங்தே நிறுவனத்துடன் இணைந்து நீலகிரி யானை நிதியை தொடங்கியுள்ளது. இந்த நிதியின் மூலம் உள்ளூர் கைவினை கலைஞர்கள் பணியமர்த்தப்படுகின்றனர்.

லந்தனா கமாரா என்பது உலகின் ஆபத்தான 10 ஆக்கிரமிப்பு தாவரங்களில் ஒன்றாகும். இதனால், நீலகிரி உயிர்க்கோளக் காப்பகம் பெரிதும் பயன் அடையும்.

- M. திலிப்குமார்

# உலக இயற்கை பாதுகாப்பு தினம்




உலகை ஆரோக்கியமாக வைத்திருக்க சுற்றுச்சூழலையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே ஆகஸ்ட் 28, உலக இயற்கை பாதுகாப்பு தினத்தின் நோக்கமாகும்.

அழிந்துபோகும் அபாயத்தில் இருக்கும் தாவரங்கள் மற்றும் விலங்குகளை காப்பாற்றுவது உலக இயற்கை பாதுகாப்பு தினத்தின் முதன்மையான மையங்களில் ஒன்றாகும் .

இயற்கையின் பல்வேறு கூறுகளை அப்படியே வைத்திருப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், ஆற்றல் வளங்கள், மண் நீர் மற்றும் காற்று ஆகியவை இதில் அடங்கும். ஒரு நிலையான, உற்பத்தித்திறன் கொண்ட மனித சமுதாயத்தை நிலைநிறுத்துவதற்கு ஆரோக்கியமான மற்றும் நன்கு செயல்படும் சூழல் முக்கியமானது என்பதை அங்கீகரிக்கும் முயற்சியே இந்த சந்தர்ப்பமாகும்.

சந்ததியினருக்கான சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. சமீப காலங்களில், மனித வளங்களை இடைவிடாமல் அதிகமாகச் சுரண்டுவதைக் கருத்தில் கொண்டு சுற்றுச்சூழலைப் பேணுவதற்கான தேவை மிகவும் அப்பட்டமாக மாறியுள்ளது, இது வித்தியாசமான வானிலை முறைகள் உலகெங்கிலும் அதிகரித்து வருவதற்கு வழிவகுத்தது.

- A. தங்கராஜ்

# தமிழ்நாட்டின் புதிய டிஜிபியாக

## பொறுப்பேற்ற சங்கர் ஜிவால்

தமிழகத்தில் ரவுடிகள், கள்ளச் சாராயத்துக்கு எதிரான நடவடிக்கை தொடரும். பொதுமக்கள் - போலீஸார் இடையே நல்லுறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட டிஜிபி சங்கர்ஜிவால் தெரிவித்தார்.

தமிழக டிஜிபி சைலேந்திரபாபு பணி ஓய்வு பெற்றார். அந்த பணியிடத்துக்கு சென்னை காவல் ஆணையராக இருந்த சங்கர் ஜிவால் நியமிக்கப்பட்டார். இந்நிலையில், டிஜிபி அலுவலகத்தில் புதிய டிஜிபியாக சங்கர்ஜிவால் பொறுப்பேற்றுக் கொண்டார்.

புதிய டிஜிபி - யாக நியமிக்கப்பட்டுள்ள சங்கர் ஜிவால், உத்ராகண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவராவார். 1990 ஆம் ஆண்டு ஐபிஎஸ் தேர்ச்சி பெற்ற சங்கர் ஜிவால் மன்னார்குடியில் ஏஎஸ்பி-ஆக தனது பணியை தொடங்கினார். சேலம் மாவட்ட எஸ்பி-ஆகவும், திருச்சி மாநகர காவல் ஆணையராகவும் பதவி வகித்துள்ளார். உளவுத்துறை ஐஜியாகவும் அவர் பணியாற்றி இருக்கிறார். பின்னர் ஏடிஜிபியாக பதவி உயர்வு பெற்ற சங்கர் ஜிவால் ஆயுதப்படையில் பணியாற்றினார். அதனைத்தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு டிஜிபி அந்தஸ்தை பெற்று சென்னை மாநகரின் 108வது காவல் ஆணையராக பதவி ஏற்றார்.

சத்தியமங்கலத்தில் சிறப்பு அதிரடிப்படையின் தலைவராக 6 ஆண்டுகள் சங்கர் ஜிவால் பதவி வகித்திருக்கிறார். பி.இ., மெக்கானிக்கல் முடித்த ஜிவால், மேலாண்மையில் டிப்ளமா, எம்எஸ் ஆராய்ச்சி படிப்பையும் முடித்திருக்கிறார். அவர் காவல்துறையை தொழில்நுட்ப ரீதியில் பலப்படுத்தியவர். போதைப் பொருள் புழக்கத்திற்கு எதிராகவும், ரவுடிகளுக்கு எதிராகவும் மற்றும் சைபர் கிரைம் பிரிவில் பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து கவனம் ஈர்த்தவர்.

அத்துடன் சென்னையில் சிற்பி, அவள், பறவ, மகிழ்ச்சி, ஆனந்தம், காக்கும் காவல் கரங்கள் போன்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி முத்திரை பதித்தவர். இந்நிலையில் புதிய டிஜிபியாக பொறுப்பேற்றுள்ள அவர், ‘‘முதலமைச்சர் மற்றும் பொதுமக்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சிறந்த முறையில் காவல்துறை செயல்படும்‘‘ என்று தெரிவித்தார்.




பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழக காவல் துறை பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது. அதேநேரம் ரவுடிகள், கள்ளச்சாராயத்துக்கு எதிரான நடவடிக்கை தொடரும். போலீஸாரின் நலன் காக்க பல புதிய திட்டங்கள் உள்ளன. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சிறப்பாக உள்ளது. அதை மேலும்சிறப்பாக்க நிறைய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது.

காவல்துறையில் போதுமான காவலர்களை நியமிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். போலீஸார் - பொதுமக்கள் இடையே நல்லுறவை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏராளமான திட்டங்கள்: அதேபோல், காவல் நிலையத்துக்கு புகார் அளிக்க வருவோரின் குறைகளை விரைந்து போக்க நடவடிக்கை எடுக்கப்படும். காவலர்களின் நலன் காக்கும் நடவடிக்கையை மேம்படுத்த உள்ளோம். சாலை விபத்துகள் நடைபெற்ற இடங்களை அடையாளம் கண்டு, விபத்துகள் மற்றும் விபத்து மரணங்களை குறைக்கவும் முயற்சி எடுக்கப்படும். சென்னை பெருநகரில் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். அதில், எந்தெந்த திட்டங்களை தமிழகம் முழுவதும் கொண்டு வரலாம் என ஆலோசித்து வருகிறோம். முதல்வர் எப்படி எதிர்பார்க்கிறாரோ அவ்வாறு சிறப்பான பணி நடைபெறும். இவ்வாறு சங்கர் ஜிவால் கூறினார்.

டிஜிபியாக பொறுப்பேற்றுக் கொண்ட சங்கர் ஜிவாலுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து வந்த போலீஸ் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர். முன்னதாக டிஜிபிசங்கர் ஜிவால், முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்துபெற்றார்.



தமிழ்நாடு காவல்துறை தலைவர் பதவியில் இருந்து சைலேந்திரபாபு இன்றுடன் ஓய்வு பெறும் நிலையில், புதிய தலைவராக சங்கர் ஜிவால் பொறுப்பேற்றுள்ளார்.

தமிழ்நாடு காவல்துறை டிஜிபி சைலேந்திரபாபுவின் பணி காலம் நிறைவு பெற்றது. அந்த பதவிக்கு சங்கர் ஜிவாலை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்தது. சங்கர் ஜிவால் வகித்து வரும் சென்னை காவல் ஆணையர் பதவிக்கு, ஆவடி மாநகராட்சி காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோரை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. இதற்கான ஆணை நேற்று வெளியிடப்பட்டது. இந்நிலையில் தமிழ்நாட்டின் புதிய டிஜிபியாக சங்கர் ஜிவால் பொறுப்பேற்றார். அனைத்து பொறுப்புகளையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டு சைலேந்திரபாபு விடை பெற்றார்.

மதுரை காவல் சரகத்துக்குட்பட்ட உயர் அதிகாரிகளுடன் தமிழக காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில், உரிய காரணங்களோடு விடுமுறை விண்ணப்பிக்கும் காவலர்களுக்கு உடனடியாக விடுப்பு வழங்க வேண்டும் என்றும், அவ்வப்போது காவல் துறையினருக்கு மன அழுத்தம் போக்கும் வகையில் புத்துணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

தமிழக காவல் துறை டிஜிபி சங்கர்ஜிவால் தலைமையில் மதுரை சரகத்துக்கு உட்பட்ட மதுரை மாநகர், மாவட்டம், விருதுநகர் மாவட்ட காவல் துறை உயரதிகாரிகளுடன் காவல் துறையினரின் மன அழுத்தம் போக்குவது குறித்தும், சட்டம் - ஒழுங்கு மற்றும் குற்றச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக, வெள்ளிக்கிழமை கோவை சரக டிஐஜி விஜயகுமார் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தேனி மாவட்டத்துக்கு வருகை தந்த நிலையில், தமிழக காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால் மதுரையில் காவல் துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதில், தென்மண்டல ஐஜி அஸ்ரா கார்க், மதுரை மாநகர் காவல் ஆணையர் நரேந்திரன் நாயர், டிஐஜி பொன்னி, மாவட்ட எஸ்பி சிவபிரசாத், விருதுநகர் எஸ்பி சீனிவாசபெருமாள் மற்றும் காவல் துறை உதவி மற்றும் துணை ஆணையர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் டிஜிபி சங்கர் ஜிவால், ‘‘காவல் துறையினர் பணியின்போது மன அழுத்தம் இன்றி பணியாற்றுவதை உறுதி செய்ய வேண்டும். பொதுமக்களின் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சைபர் கிரைம் குற்றங்களை அதீத கவனத்துடன் கண்காணித்து அத்தகைய குற்றங்களை தடுக்க வேண்டும். குழந்தைகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்ய ரோந்து பணிகளை தீவிரப்படுத்த வேண்டும். மேலும், பொதுமக்கள் காவல் துறையினர் நட்புறவை பேணிக் காப்பதை காவல் துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

உரிய காரணங்களோடு விடுமுறை விண்ணப்பிக்கும் காவலர்களுக்கு உடனடியாக விடுப்பு வழங்க வேண்டும். பாதுகாப்பு பணிகளில் ஈடுபடும் காவலர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதிபடுத்த வேண்டும். அவ்வப்போது காவல் துறையினருக்கு மன அழுத்தம் போக்கும் வகையில் புத்துணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டும். பள்ளி, கல்லூரி மாணாக்கர்களை குறிவைத்து கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யும் நபர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பைக் ரேஸில் ஈடுபடும் இளைஞர்களை கட்டுப்படுத்தி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்‘‘ என்பது உள்ளிட்ட அறிவுறுத்தல்களை வழங்கினார்.

முன்னதாக, கோவை சரக டிஐஜி விஜயகுமார் வீட்டில் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். குடும்ப பிரச்சினையா அல்லது பணிச்சுமை காரணமா என்று போலீஸார் விசாரித்து வருகின்றனர். இந்தச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, காவல் துறையினரின் மன அழுத்தம் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவது கவனிக்கத்தக்கது.

**- நா வீ சிவசங்கர்**

# மாதாந்திர மின் கட்டணம் எப்போது?

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துத்தந்த நெறிமுறையின்படி, வீட்டு இணைப்புகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் இருந்தாலும், அந்த கட்டண உயர்வை அரசே மானியமாக தந்துவிடும் என்று மக்கள் மீது சுமையை ஏற்றாத வகையில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறப்பித்திருக்கும் உத்தரவு மக்களுக்கு பெருமகிழ்ச்சியை தந்துள்ளது.

இப்போது மக்களின் மேலும் ஒரு கோரிக்கையை நிறைவேற்ற தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. அதற்கான முன்னெடுப்புகளையும் தொடங்கிவிட்டது. மின்சார கட்டணம் தற்போது 2 மாதங்களுக்கு ஒருமுறை வசூலிக்கப்படுகிறது. மாதந்தோறும் மின்சார கட்டணத்தை வசூலித்தால், இந்த சலுகைகள் மாதந்தோறும் கிடைத்து மக்களுக்கு அதிக பலன் கிடைக்கும். இதற்காகத்தான் தி.மு.க. தேர்தல் அறிக்கையிலேயே, 2 மாதங்களுக்கு ஒருமுறை மின் பயன் அளவீடு செய்யப்படுவதால், அதிகமாக மின்கட்டணம் வசூலிப்பதை தவிர்க்கும் வகையில், மாதந்தோறும் மின் உபயோகம் கணக்கிடும்முறை கொண்டு வரப்படும்.

இதனால் 2 மாதங்களுக்கு 100 யூனிட்டுகளுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்துவோர், ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் வரையில் பயன்பெறுவார்கள் என்று வாக்குறுதியாக கூறப்பட்டிருந்தது. இவ்வாறு மாதந்தோறும் மின்சார கட்டணம் செலுத்தும் முறை வரவேண்டுமென்றால், மின் பயனீட்டு அளவை துல்லியமாக கணக்கிடும் 'ஸ்மார்ட் மீட்டர்கள்' அனைத்து இணைப்புகளுக்கும் பொருத்தப்பட வேண்டும். சட்டசபையில் மானியக்கோரிக்கை மீது நடந்த விவாதத்துக்கு பதிலளிக்கும்போது அமைச்சர் செந்தில் பாலாஜி, "இந்தியாவில் எந்த மாநிலமும் செயல்படுத்தாத அளவுக்கு புதிய வடிவமைப்புடன் விரைவில் 'ஸ்மார்ட் மீட்டர்கள்' பொருத்தப்படும்" என்று கூறினார்.

இப்போது மதுரை, திருச்சி, கோவை, நெல்லை உள்பட 24 மாவட்டங்களில் அனைத்து வீட்டு இணைப்புகள் மற்றும் குறைந்த அழுத்த





மின் இணைப்புகளுக்கு தேவையான 'ஸ்மார்ட் மீட்டர்கள்' வாங்குவதற்காக டெண்டர்கள் கோரப்பட்டுள்ளது. சென்னை மற்றும் இதர மாவட்டங்களிலும், அடுத்து மிக விரைவில் டெண்டர் கோரப்பட இருக்கிறது. ஏற்கனவே தியாகராயநகர் மற்றும் கோடம்பாக்கத்தில் உள்ள சில பகுதிகளில், 1 லட்சத்து 25 ஆயிரம் 'ஸ்மார்ட் மீட்டர்கள்' பொருத்தப்பட்டுள்ளன. 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தப்பட்டால் பயனீட்டு அளவு, கட்டணம் துல்லியமாக கணக்கிடப்படும். செல்போனுக்கு கட்டண விவரம் குறுஞ்செய்தியாக வந்துவிடும். உரிய நேரத்தில் கட்டணம் கட்டவில்லையென்றால், இணைப்பு தானாகவே துண்டிக்கப்பட்டுவிடும். பணம் கட்டிவிட்டால், தானாகவே மின்சார சப்ளை திரும்ப வழங்கப்பட்டுவிடும்.

இப்போது இந்த பணிகளையெல்லாம் மின்சார வாரிய ஊழியர்களே நேரில் வந்து செய்யும் நிலை, 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தப்பட்டால் இருக்காது. இந்தநிலையில் 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தப்பட்ட பிறகு மாதாந்திர கட்டணம் வசூலிக்கப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்திருப்பது மிகவும் நம்பிக்கை அளிக்கிறது. எனவே மக்களுக்கு பயனளிக்கும் இந்த 'ஸ்மார்ட் மீட்டர்' பொருத்தும் பணிகளை மின்சார வேகத்தில் நடத்திக்காட்டி, அரசு வெகுசீக்கிரம் மாதந்தோறும் மின்சார கட்டணம் செலுத்தும் முறையை கொண்டுவர வேண்டும் என்பதே மக்களின்

- K. **கலைமணி**

# அமசான் காடுகள் அழிக்கப்படுவதை 2030ஆம் ஆண்டுக்குள் தடுத்து நிறுத்த பிரேசில் திட்டம்





பிரேசில் அதிபர் லூலா இனாசியோ டா சில்வா (Luiz Inacio Lula da Silva) அமசான் (Amazon) காடுகள் அழிக்கப்படுவதை 2030ஆம் ஆண்டுக்குள் தடுத்து நிறுத்தும் திட்டத்தை வெளியிட்டுள்ளார்.

அமசானில் சுற்றுச்சூழல் குற்றங்களைத் தடுக்கத் திரு. லூலா சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிடுகிறார்.

பிரேசில், பொலிவியா, பெரு, ஈகுவேடார், கொலம்பியா, வெனிசுவேலா, கயானா, சுரினாம், பிரெஞ்ச் கயானா ஆகிய 9 நாடுகளில் அமேசான் காடு பரந்து விரிந்துள்ளது.

40 ஆயிரம் செடி வகைகள், 1,300 பறவை வகைகள், 2,200 மீன் வகைகள், 427 வகை பாலூட்டிகள் அமேசான் காட்டில் உள்ளன. சுமார் 500 வகையான பழங்குடியினர் இக்காட்டில் வசிக்கின்றனர்.

சமீப காலமாகவே சுரங்க நடவடிக்கைகள், காட்டுத் தீ காரணமாக அமேசான் காடுகள் 20 சதவீதம் அழிக்கப்பட்டுள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு விநாடியிலும் 1.5 ஏக்கர் அளவிலான அமேசான் காடு அழிக்கப்பட்டு வருவதாக ஆய்வாளர்களும் கூறுகின்றனர்.

சீரழிந்த வனப்பகுதிக்கு வனப்பூட்டவும், வட்டாரத் தாவரங்களை செழிக்கச் செய்யவும் திட்டம் கைகொடுக்கும்.

காடுகளைப் பாதுகாப்பதற்கும், நீடித்த நிலைத்தன்மையுடன் அவற்றை நிர்வகிப்பதற்கும் அரசாங்கம் கூடுதல் நிதி வழங்கும்.

அமசானில் விளையும் காய்கனிகள், உலவும் உயிரினங்கள், மரக்கட்டைகள் முதலியன எங்கே கொண்டு செல்லப்படுகின்றன என்பதைக் கண்டறிய பிரேசில் அரசாங்கம் புதிய வழிமுறையை உருவாக்கும்.

காடுகள் அழிக்கப்பட்ட நிலத்திலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்படவில்லை என்பதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

அமசான் காடுகளைப் பாதுகாக்க பிரேசில் முதற்கட்டமாக அத்தகைய நடவடிக்கைகளைத் தொடங்கியிருக்கிறது.

- P. அசோக்குமார்

# தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப்: ஹரியானாவை வீழ்த்திய தமிழ்நாடு

## நேரில் வாழ்த்திய முதல்வர்!




தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியானது பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் நடைபெற்று வந்தது. லீக் சுற்றுகளில் அடிப்படையில் தமிழ்நாடு - ஹரியானா அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறினர். இறுதிப்போட்டியில், தமிழ்நாடு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹரியானாவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

கடைசியாக தமிழ்நாடு அணி கடந்த 2017-18ம் ஆண்டு கோப்பையை வென்றது. இதையடுத்து 5 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது மீண்டும் தமிழ்நாடு அணி சாம்பியன் பட்டம் வென்றதால், வீராங்கனைகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தநிலையில், தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டியில் தங்கக் கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் முகஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்தியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 03.07.2023 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 27-வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் - 2023 போட்டியில் தங்கக் கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் சந்தித்து, கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

27-வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப்- 2023 போட்டி, பஞ்சாப் மாநிலம், அம்ரிஸ்தரில் ஜூன் 12 முதல் 28 வரை

நடைபெற்றது. இந்தப் போட்டியில் விளையாடிய தமிழ்நாடு அணி அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது. பின்னர் 26.06.2023 அன்று நடைபெற்ற இரயில்வே அணிக்கு எதிரான அரையிறுதியில், தமிழ்நாடு அணி 3 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு சீனியர் பெண்கள் கால்பந்து அணி இறுதி சுற்றுக்கு தகுதி பெற்றது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, 28.06.2023 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஹரியானா அணியை வென்று, முதலிடம் பெற்று தங்கப் கோப்பையை வென்று சாதனை படைத்தது.

தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாடு அணியின் சார்பில் டி.தேவி. என்.சௌமியா, பி.தனலட்சுமி, எஸ்.கௌசல்யா, என்.லாவண்யா.எம்.பவித்ரா, பி.துரிகா, எஸ்.சண்முகப்பிரியா. எம்.சுபாஷிணி. எம்.பரமேஸ்வரி, எஸ்.பிரியதர்ஷினி. எம்.மாளவிகா, எம்.நந்தினி. ஏ.கார்த்திகா, கே.இந்துமதி, ஆர்.வினோதினி. எஸ்.ஐஸ்வர்யா, ஆர்.சந்தியா. பி.சந்தியா, எஸ்.சண்முகப்பிரியா, ஆர்.யுவராணி. என்.அம்சவள்ளி மற்றும் பயிற்சியாளர்கள் திருமதி.எஸ்.கோகிலா மற்றும் திருமதி வி.கலா ஆகியோர் பங்கேற்றனர். இந்த அணியில் உள்ள 12 வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற முன்னாள் மாணவியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

27-வது தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப்- 2023 போட்டியில் முதலிடம் பெற்று தங்க கோப்பை வென்ற தமிழ்நாடு அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை இன்றைய தினம் சந்தித்து வாழ்த்துப் பெற்று அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

- A. **ஐயப்பன்**


| Advertisement Tariff | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 10,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 8,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 5,000/- |
| Full Page Black & White | : | ₹ 5,000/- |
| Half Page Black & White | : | ₹ 2,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338

# பொது சிவில் சட்டம்: என்பது என்ன?

அனைத்து மதங்களின் தனிநபர் சட்டங்களுக்கும் பொதுவான நெறிமுறைகளைக் கொண்டதாகப் பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்கிறது மத்திய அரசு.

**பொது சிவில் சட்டம் குறித்து பிரதமர் மோடி:**

பாஜகவின் முக்கியமான தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக இருப்பது, அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம். இதை நடைமுறைப் படுத்துவதற்கு மோடி தலைமையிலான மத்திய அரசு முயற்சி செய்து வருகிறது. இந்த நிலையில், கடந்த மாதம் 27ஆம் தேதி மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரதமர் மோடி, “பொது சிவில் சட்ட விவகாரத்தில் சிலர் தவறான கருத்துகளைப் பரப்பி, குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். ஒரு குடும்பத்தில் தாத்தா, பாட்டி, கணவன், மனைவி, மகன், மகள் எனப் பல உறுப்பினர்கள் உள்ளனர்.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினருக்கு ஒரு சட்டமும், மற்றோர் உறுப்பினருக்கு வேறொரு சட்டத்தையும் பின்பற்ற முடியுமா? அவ்வாறு இரண்டு சட்டங்களைப் பின்பற்றினால் அந்தக் குடும்பத்தை நடத்த முடியுமா? இந்தக் கருத்தை நமது நாட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறேன். இரண்டுவிதமான சட்டங்களால் நாட்டின் நிர்வாகத்தை நடத்த முடியுமா? நாட்டின் குடிமக்கள் அனைவரும் சமம் என்று அரசமைப்பு சாசனம் கூறுகிறது. இதற்கேற்ப பொது சிவில் சட்டத்தை வரையறுக்குமாறு உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது அவசியம்” எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு காங்கிரஸ், திமுக ஆகிய எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தாலும், ஆம் ஆத்மி, சிவசேனா உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இதனால் இந்த விஷயத்திலேயே எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை நிலவவில்லை எனவும் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை எனவும் சொல்லப்படுகிறது. வடமாநிலங்களில் வளர்ந்து நிற்கும் பல கட்சிகள் பொது சிவில் சட்டத்தில் வெவ்வேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன. சில கட்சிகள் சட்டத்தின் முன்வரைவுக்காகக் காத்திருக்கின்றன.




**பொது சிவில் சட்டம் என்பது என்ன?:**

பொது சிவில் சட்டம் என்பது, மதத்தின் அடிப்படையில் இல்லாமல் நாட்டில் உள்ள அனைவருக்கும் ஒரேமாதிரியான பொதுவான சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது ஆகும்.

நம் நாட்டில் இந்து, கிறிஸ்து, முஸ்லிம், சீக்கியம், பவுத்தம், சமணம், பார்சி என பன்முக மதத்தவர்கள் உள்ளனர். இதில் இந்து மதம் பெரும்பான்மையானதாகவும், இதர மதங்கள் சிறுபான்மையானதாகவும் கருதப்படுகிறது. இதனால் இம்மதம் சம்பந்தப்பட்ட திருமணம், விவாகரத்து, சொத்துப் பகிர்வு, பழக்கவழக்கம், தத்தெடுக்கும் உரிமை, ஜீவனாம்சம் உள்ளிட்டவற்றில் ஒவ்வொரு மதத்தவருக்கும் தனித்தனியாகச் சட்டங்கள் இயற்றப்பட்டு உள்ளன. அதாவது, ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு தனிநபர் சட்டத்தைப் பின்பற்றுகிறது.

இந்து மதத்தைப் பொறுத்தவரை தனியாகக் குடும்பவியல் சட்டம் இருக்கிறது. இந்துச் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்குத் திருமண வாரிசு, சடங்கு எனப் பல்வேறு அம்சங்களில் பெரியளவில் முரண்பாடு உள்ளது. இந்துக்கள் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தால் வரிச்சலுகைகள் உண்டு. இந்துக்கள் குழந்தைகளைத் தத்தெடுக்கவும், ஜீவனாம்சம் பெறவும் தனிச் சட்டங்கள் உண்டு. அதுபோல், மலைவாழ் மக்களின் பழக்கவழக்கம் என 400க்கும் மேற்பட்ட இந்துத் தனியார் சட்டங்கள் உள்ளன.

சீக்கியர்களின் மத உணர்வுகளை மதிக்கும் வகையில், அவர்களின் மதச் சட்டப்படி,

சுய பாதுகாப்பிற்காக எந்நேரமும் கத்தி வைத்திருக்கவும், காவல் துறை மற்றும் ராணுவத்தில் பணிபுரிந்தாலும்கூட அங்குள்ள விதிகளுக்கு மாறாக சீக்கியர்கள் தாடி மற்றும் தலையில் டர்பன் வைத்துக் கொள்ளவும் அவர்களுக்கான தனி நபர் சட்டம் அனுமதி அளிக்கிறது.

இதேபோன்று, 'ஷரியத்' சட்டத்தைப் பின்பற்றுவது முஸ்லிம்களின் மத நம்பிக்கையில் ஒன்று. இந்தியாவில் இது 'முஸ்லிம் தனிநபர் சட்டம்' என்கிற பெயரில் 1937இல் இயற்றப்பட்டது. முஸ்லிம் தனிநபர்கள், அவர்கள் குடும்பம் பற்றிய அக்கறை, முஸ்லிம் சமூகம் சார்ந்த திருமணம், மணமுறிவு, வாரிசு, வக்பு உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைக் கையாள்வது குறித்த விவகாரங்களுக்கு பொருந்துவதாக இச்சட்டம் உள்ளது. எனினும், இதில் நீதிமன்றமே உச்சபட்ச அதிகார அமைப்பாக உள்ளது.

இப்படி, சட்டங்கள் ஒவ்வொரு மதத்தவருக்கும் தனித்தனியாக இருப்பது நிர்வாகத்தில் பெரும் இடையூறுகளை ஏற்படுத்துவதாக மத்திய அரசு கூறி வருகிறது. இப்படியான அனைத்து மதங்களின் தனிநபர் சட்டங்களுக்கும் பொதுவான நெறிமுறைகளைக் கொண்டதாக பொது சிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்கிறது மத்திய அரசு.

இதை, அரசமைப்புச் சட்டத்தின் 44-வது பிரிவும் வலியுறுத்துகிறது. மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஊக்குவிக்கும் நோக்கில் நாட்டில் அனைத்து சமூக மக்களுக்கும் பொதுவான சட்டங்களை வகுக்க அரசுகள் முயற்சிக்க வேண்டுமென அப்பிரிவு வலியுறுத்துகிறது.

பல வழக்குகளில் அரசியல் சாசனத்தின் 44-வது பிரிவு பற்றியும், பொது சிவில் சட்டம் பற்றியும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டிருப்பதுடன், பல்வேறு தீர்ப்புகள் மூலமாக பொது சிவில் சட்டத்தை நாட்டின் ஒருமைப்பாட்டுக்காகக் கொண்டு வரலாம் எனவும் வலியுறுத்தி உள்ளது.

அரசியல் சாசனம், தாம் விரும்பும் வகையில் மதத்தைப் பின்பற்ற சுதந்திரம் வழங்குகிறது. ஆனால், பொது சிவில் சட்டம் அந்த உரிமைகளைப் பறித்து விடுமோ என்ற அச்சம் நிலவுகிறது.

பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதால் சிறுபான்மையினரின் மதங்களைப் பின்பற்றும் அடிப்படை உரிமை பாதிக்கப்படலாம். பொது சிவில் சட்டம் காரணமாக, பழங்குடியினரின் அடையாளத்துக்கு ஆபத்து ஏற்படலாம். மேலும், ஒவ்வொரு மதத்தின் தனிப்பட்ட கலாசாரத்திற்கு ஏற்ப உள்ள தனிநபர் சட்டங்களை அதன் சாரம் குறையாமல், பொது சிவில் சட்டத்தில் இடம்பெறச் செய்வது என்பது சிக்கலானது.

தவிர, இந்திய தேர்தல் அரசியலில், பொது சிவில் சட்டம் என்பது மதக்கண்ணோட்டத்தில் பார்க்கப்படுகிறது. இதன் காரணமாகவே இச்சட்டத்திற்கு எதிர்ப்பும் தடையும் நிலவுகிறது என்கின்றனர், அவர்கள். அதேநேரத்தில், பொது சிவில் சட்டத்தின் நோக்கம் நாட்டில் இருக்கும் அனைத்து குடிமக்களுக்குமான தனிச் சட்டத்தை பாலினம், சாதி பாகுபாடு இன்றி அனைவருக்கும் சமமாகப் பொருந்தும் வகையில் மாற்றி அமைப்பதே ஆகும் என மத்திய அரசு வாதிடுகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, "பொது சிவில் சட்டம் என்பது அனைவருக்கும் நன்மை தரக்கூடியது. சிறுபான்மையினருக்கும் நன்மை தரக்கூடியது. இது அனைவரையும் இணைப்பதற்கான சட்டம், பிரிப்பதற்கானது அல்ல. கருத்து வேறுபாடுகளைக் கடந்து அனைத்துக் கட்சிகளும் இணைந்து பொது சிவில் சட்டத்தை கொண்டுவர வேண்டும்" என்றார்.

பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன், "பெண்களுக்கான பாதுகாப்பு, சொத்துரிமை ஆகியவற்றுக்கு, பொதுசிவில் சட்டம் காலத்தின் கட்டாயம்" என்றார்.

ஆம் ஆத்மி தேசிய பொதுச் செயலாளரும் ராஜ்யசபா எம்.பி.யுமான சந்தீப் பதக், "கொள்கை அளவில் நாங்கள் பொது சிவில் சட்டத்தை ஆதரிக்கிறோம். அரசியலமைப்பின் 44வது பிரிவும் அதையேதான் வலியுறுத்துகிறது" எனத் தெரி வித்துள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், "பாஜகவின் சொல்லாலும் செயலாலும் நாடு பிளவுபட்டுள்ளது. பொது சிவில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்போது, அந்தப் பிரிவு மேலும் அதிகமாகும்" எனப் பதிவிட்டுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், "ஒரு நாட்டில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்கக் கூடாது என்கிறார் நம்முடைய மோடி. எனவே மதப் பிரச்னையை அதிகமாக்கி, நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெற்றுவிடலாம் என்று அவர் கருதிக் கொண்டிருக்கிறார். அதற்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவர்" என்றார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, "பொது சிவில் சட்டத்திற்கு அதிமுக எதிராகவே உள்ளது. 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் பொது சிவில் சட்டம் தொடர்பான எங்களது நிலைப்பாட்டை தெளிவாகத் தெரிவித்துள்ளோம். எந்த வடிவத்திலும் அதனை நிறைவேற்றக் கூடாது என வலியுறுத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**- அன்புமணி**

MOVIE TIME

# சினிமா விமர்சனம்

## இன்ஃபினிட்டி

இன்ஃபினிட்டி என்றால் முடிவிலி அதாவது எல்லையற்ற என்று பொருள். நாட்டில் நடக்கும் சில நிகழ்வுகளும் அது தொடர்பான எதிர்நிகழ்வுகளும் முடிவற்றவை என்பதைச் சொல்லியிருக்கும் படம் இன்ஃபினிட்டி.

தொடர் கொலைகள், அவற்றை நூல் பிடித்து துப்பறியும் அதிகாரி என்ற இன்வெஸ்டிகேட்டிவ் த்ரில்லருக்கான டெம்ப்ளேட்டுடன் வெளியாகி யிருக்கும் 'இன்ஃபினிட்டி' திரைப்படம் ரசிகர்களை ஈர்த்ததா என்று பார்க்கலாம்.

நகரத்தில் ஓர் இளம்பெண், ஒரு எழுத்தாளர், ஒரு காவல் அதிகாரி என அடுத்தடுத்து கொல்லப்படுகின்றனர். பார் ஒன்றில் அடையாளம் தெரியாத நபர் ஒருவரும் கொல்லப்படுகிறார். இந்தத் தொடர் கொலை வழக்குகள் சிபிஐ அதிகாரியான எவ்வி இளவளவனிடம் (நட்டி நட்ராஜ்) ஒப்படைக்கப்படுகின்றன. சில கட்ட விசாரணைகளுக்குப் பிறகு இந்த மூன்று கொலைகளுக்கும் தொடர்பு இருப்பதை அறிந்து கொள்கிறார் நாயகன். இடையில் நாயகனை கொல்லவும் முயற்சிகள் நடக்கின்றன. மூன்று கொலைகளுக்கும் இருக்கும் தொடர்பு என்ன? கொலையாளியை நாயகன் கண்டுபிடித்தாரா? - இதுதான் 'இன்ஃபினிட்டி' படத்தின் கதை.

சென்னையில் நடக்கும் கொலைகளைப் பற்றி விசாரிக்கும் காவல்துறை அதிகாரியும் கொல்லப் படுவதால் சிபிஐ நட்டி விசாரணை அதிகாரியாகிறார்.

வேடத்தின் தன்மை உணர்ந்து நிதானமாக நடித்திருக்கிறார். விசாரணை என்பது ஒருவரை உடல்ரீதியாகத் துன்புறுத்துவன்று சிந்தித்துச் செயல்படுவது என்பது அவருடைய நடவடிக்கை களில் வெளிப்படுகிறது.

மருத்துவராக நடித்திருக்கும் வித்யாபிரதீப் நன்று. அவருடைய உருண்டு திரண்ட கண்கள் பாத்திரத்துக்குப் பலம் சேர்த்திருக்கின்றன.

நகைச்சுவைக்கென முனீஷ்காந்தை வைத்திருக் கிறார்கள். அவரும் அதற்கான முயற்சிகள் செய்திருக்கிறார். முடிவு சுபமாக இல்லை.




அறிமுக நடிகர் ஆதவன் கவனிக்க வைக்கிறார்.

முருகானந்தம், சார்லஸ் வினோத், வினோத் சாகர், நிகிதா, ஜீவா ரவி உள்ளிட்டு படத்தில் பலர் நடித்திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவாளர் சர்வணன்ஸ்ரீ, புகழ்பெற்ற ஒளிப்பதிவாளருக்குக் காட்சிகள் வைக்கிறோம் என்கிற பதட்டத்திலேயே பணிபுரிந்திருப்பார் போலிருக்கிறது.

இம்மாதிரியான படங்களின் திரைக்கதை கிட்டத்தட்ட ஒரேமாதிரியாக இருக்கும். அதைத் தவிர்க்கவியலாது.அதேசமயம்,கதையில் நடக்கிற கொலைக்கான காரணம் முக்கியப்பங்கு வகிக்கும், அதை இந்தப்படத்தில் சர்ச்சைக்குரிய விதத்தில் அமைந்திருக்கிறார் இயக்குநர் சாய்கார்த்திக்.

துடிப்பான சிபிஐ அதிகாரியான குறை சொல்லமுடியாத நடிப்பை வழங்கியிருக்கிறார். மற்றபடி படத்தில் வரும் பிரதான கதாபாத்திரங்கள் முதல் துணைக் கதாபாத்திரங்கள் வரை அனைவரிடமும் அமெச்சூர்த்தனமான நடிப்பே வெளிப்படுகிறது. பாலசுப்ரமணியத்தின் பின்னணி இசை ஓகே ரகம். பிரதீப் குமார் குரலில் 'உயிர் துறந்து' பாடல் ஈர்க்கிறது.

- P. **கார்த்திகேயன்**

# மிகக்குறைந்த அதிர்வெண் புவியீர்ப்பு அலைகள் மூலம் பிரபஞ்சத்தின் இடைவிடாத ஓசையை வெளிப்படுத்துவதில் ஐஐடி ரூர்க்கி ஆய்வாளர்கள் பங்களிப்பு செய்துள்ளனர்

இந்தியாவின் மிகப்பெரிய தொலை நோக்கியான யூஜிஎம்ஆர்டி உட்பட, உலகின் ஆறு உணர்திறன் வாய்ந்த ரேடியோ தொலைநோக்கிகளைப் பயன்படுத்தி, இந்தியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த சர்வதேச வானியலாளர்கள் குழுவினர், இயற்கையின் சிறந்த கடிகாரங்கள் மற்றும் பல்சர்களை (கண்ணுக்குப் புலனாகாமல் இயங்கும் விண்மீன்களை) கண்காணிப்பதன் முடிவுகளை அண்மையில் வெளி யிட்டனர்.

இந்த முடிவுகள் மிகக்குறைந்த அதிர்வெண் ஈர்ப்பு அலைகளால் ஏற்படும், பிரபஞ்சத்தின் இடைவிடாத அதிர்வுகளுக்கு நம்பிக்கை தரும் சான்றுகளை வழங்குகின்றன. இத்தகைய அலைகள் சூரியனை விட கோடி மடங்கு கனமான, அசைந்தாடும் மாபெரும் கருந்துளை இணைகளில் இருந்து உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புவியீர்ப்பு அலைக்கற்றையில் புதிய, வானியற்பியல் நிறைந்த வழித்திறப்பில் இந்தக் குழுவின் முடிவுகள் ஒரு முக்கியமான மைல்கல் ஆகும். பேராசிரியர். பி. ஆறுமுகம், அவரது மூத்த பிஎச்.டி மாணவர் திரு. ஜெய்கொம்ப சிங்க ஆகியோர் இந்த சிறப்பான முடிவுகளின் ஒரு பகுதியாக உள்ளனர்.

ஆரம்பகால தொழில்முறை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இளங்கலை மாணவர்கள் உட்பட பல விஞ் ஞானிகளின் பல ஆண்டு முயற்சியின் காரணமாக இந்த முடிவுகள் எட்டப்பட்டுள்ளன. இந்த முடிவுகளை அடைவதில் ஐஐடி ரூர்க்கி தொடர்ந்து பல்வேறு வழிகளில் பங்களிப்பு செய்ததற்கு இதன் இயற்பியல் பேராசிரியர் ஆறுமுகம் நன்றி தெரி வித்துள்ளார்.

“இது ஆரம்பகாலத் தொழில்முறை ஆராய்ச்சியாளர்களுக்கு மிகவும் உற்சாகமான நேரமாகும். உலகெங்கிலும் உள்ள







ஆராய்ச்சியாளர்களின் குழு ஒத்துழைத்து, நமது பிரபஞ்சத்தின் ஓசையைக் கேட்க முயற்சிக்கும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். தற்போதைய முடிவுகள் எதிர்காலத்தில் நமக்கு வியப்பூட்டும் அறி வியலைத் திறக்கும்“ என்று ஐஐடி ரூர்க்கியின் மூத்த பிஎச்டி மாணவர் திரு சிங்ஹா தெரிவித்தார்.

“இந்த முயற்சியில் ஐஐடி ரூர்க்கியின் பரம் கங்கா போன்ற அதிநவீன வசதி கள் பயன்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சாதனை, அறிவியல் இலக்குகளை அடைவதில் சர்வதேச ஒத்துழைப்புகளின் சக்தியை எடுத்துக்காட்டுகிறது. பிரபஞ்சத்தைப் பற்றிய நமது புரிதலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கிறது” என்று ஐஐடி ரூர்க்கி இயக்குநர் பேராசிரியர் கே.கே பந்த் தெரிவித்தார்.

- G. **தீபக்**

## வேளாண் வணிகத் திருவிழா 2023

# ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!




**வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, விழா கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் சிறந்து விளங்கிய விவசாயிகளுக்கு விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.7.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் வேளாண் வணிகத் திருவிழா 2023யை தொடங்கி வைத்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு விருதுகள் வழங்கினார்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்களை இவ்வரசு ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றது. மாநிலத்தின் பொருளாதாரம் வளரும்போது விவசாயிகளின் வாழ்வும் அதே அளவு வளர்ந்து செழிக்க வேண்டும் என்பதே அரசின் குறிக்கோள்.

**அடித்தளமாக அமைந்து வருகின்றன!**

2023-24ஆம் ஆண்டிற்கான வேளாண்மை உழவர் நலத்துறையின் மானியக் கோரிக்கையில், மாநில அளவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான (Farmer Producer Organisation) கண்காட்சி சென்னையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் என்பவை வேளாண் தொழிலை அதன் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கும், விவசாய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை வணிகப்படுத்துதலுக்கும் அடித்தளமாக அமைந்து வருகின்றன.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் வணிக ரீதியாக இலாபகரமாக இயங்குவதற்கு, தமிழ்நாடு அரசு பயிற்சியும், நிதிஉதவியும் வழங்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, வேளாண் வணிகத் திருவிழா 2023 சென்னை வர்த்தக மையத்தில் நேற்று (08.07.2023) முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவ

னங்களின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

**கண்காட்சி அரங்குகளின் விவரங்கள்!**

இவ்வேளாண் வணிகத் திருவிழா வில் 176 கண்காட்சி அரங்குகள் அமைக் கப்பட்டுள்ளன. இதில், 86 அரங்குகளில் 188 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்க ளின் விளைபொருட்களும், 90 அரங்குக ளில் வேளாண்மை சார்ந்த பல்வேறு துறைகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக்கழகம், வேளாண் மற்றும் பதப்ப டுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), நபார்டு வங்கி (NABARD), தொழில் முனைவோர் கள், பிற மாநிலங்களில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள், வங்கி கள் போன்ற பல்வேறு அமைப்புகள் சார்ந்த கண்காட்சிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வரங்குகளில் சிறுதானியங்கள், பாரம்பரிய அரிசி வகைகள், பயறு வகை கள், எண்ணெய்வித்துக்கள், பனை சார்ந்த பொருட்கள், நறுமணப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், பூக்கள், சிறுதானி யங்களில் மதிப்புக்கூட்டப்பட்ட தின்பண டங்கள், உடனடியாக சமைக்கும் உண வுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விளைபொருட்கள் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு விருதுகள்!**

இவ்விழாவில் முதலமைச்சர் அவர்க ளால் "ஆளுமையில் சிறந்த உழவர் உற் பத்தியாளர் நிறுவனத்திற்கான விருதினை" புதுக்கோட்டை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும், ஈரோடு கழனி உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் திற்கும், "வர்த்தகத்தில் சிறந்த உழவர் உற் பத்தியாளர் நிறுவனத்திற்கான விருது" கடலூர் மாவட்டம், மங்களூர் தானியப் பயிர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவ னத்திற்கும், சேலம் வீரபாண்டி களஞ்சிய ஜீவிதம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத் திற்கும், தூத்துக்குடி பயறு உற்பத்தியாளர் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டது.

தொடர்ந்து, 2022-23ஆம் ஆண்டில் வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங் கும் கடலூர் மாவட்டம், பண்ருட்டியை சேர்ந்த விவசாயி ம.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு விருதும், இரண்டு இலட்சம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் வழங்கப் பட்டது.

**முக்கிய தலைப்புகளில் கருத்தரங்குகள்!**

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த வணிகம் குறித்த விழிப்புணர்வையும் தொழில் வாய்ப்புகள் குறித்தும் விவசாயி கள் மற்றும் பொதுமக்கள் தகவல்களை பெறுவதற்காக துறை சார்ந்த வல்லுநர்க ளைக் கொண்டு கருத்தரங்கங்கள் இன் றும் நாளையும் நடைபெற உள்ளன.

வேளாண் வணிகத் திருவிழாவில் இன்றையதினம் மாலை, உழவர் உற்பத் தியாளர் நிறுவனங்களை திறமையான முறையில் நிர்வகித்தல், உழவர் உற்பத்தி யாளர் நிறுவனங்களுக்கான நிதிஉதவித் திட்டங்கள் தொடர்பான கருத்தரங்குகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனப் பிரதிநிதி கள் கலந்து கொண்டு பயனடைய உள்ளனர்.

அதைத் தொடர்ந்து இன்று (9.07 .2023) அறுவடைக்குப் பின் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல், ஏற்றுமதிக்கான சந்தை வாய்ப்புகள், வெற் றிபெற்ற உழவர் உற்பத்தியாளர் நிறுவ னங்கள் கடந்து வந்த பாதை, டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்த கருத்தரங்குகளும், உழவர் உற் பத்தியாளர் நிறுவனங்களில் பொருட்களின் விற்பனையினை எளிதாக்கும் வகையில், வாங்குபவர்விற்பனையாளர் சந்திப்பும் (BuyersSellers Meet) நடைபெற உள்ளது. இவ்வேளாண் வணிகத் திருவிழாவில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பய னடைவர்.

இவ்விழாவில், வேண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

எம். ஆர். கே. பன்னீர் செல்வம், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங் கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், சர்க்கரைத் துறை ஆணையர் சி. விஜய ராஜ் குமார், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி. சமயமூர்த்தி, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் டாக்டர் ஆர். நந்தகோபால், வேளாண்மை ஆணையர் டாக் டர் எல். சுப்பிரமணியன், வேளாண்மை விற் பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச. நடராஜன், தோட் டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

- B. நவின்குமார்




## விண்ணில் பாய்ந்தது!

# 'சந்திரயான்-3'

ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய இஸ்ரோ தலைவர் சோமநாத், ‘‘திட்டமிட்டபடி விண்கலம் பூமியில் இருந்து 179 கிலோ மீட்டர் தொலைவில் அதன் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. சந்திரயான்-3 நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கிவிட்டது. இனி எல்லாம் சரியாக நடைபெற வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்’’ என்று தெரிவித்தார். ‘மிஷன் அக்கம்ப்ளிஷ்ட்’ என்று ஆங்கிலத்தில் அவர் உரையைத் தொடங்கியதும் அரங்கில் கரகோஷம் எழுந்தது.

தொடர்ந்து பேசிய சந்திரயான்-3 திட்ட இயக்குநர் மோகன் குமார், ‘‘சந்திரயான்-3 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டதன் மூலம் மீண்டும் அது மிகவும் வலுவான ஒரு விண்கலம் என்பதை உலகுக்கு நிரூபித்துள்ளது’’ என்று பெருமிதம் தெரிவித்தார். தொடர்ந்து இந்தத் திட்டத்தில் பணியாற்றிய அனைவருக்கும் தனது வாழ்த்துகளையும் நன்றியையும் அவர் பதிவு செய்தார்.

பிரதமர் மோடி பெருமிதம்: பிரான்ஸ் அதிபரின் அழைப்பை ஏற்று, அந்நாட்டின் தேசிய தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி பாரிஸ் சென்றுள்ளார். சந்திரயான்-3 விண்ணில் ஏவப்படும் நிகழ்வை அங்கிருந்தவாறே பிரதமர் கவனித்து வந்தார். இந்நிலையில், ‘‘இந்தியாவின் விண்வெளி சாகசத்தில் புதிய அத்தியாயத்தை சந்திரயான்-3 படைத்துள்ளது. அது உயரப் பறந்து ஒவ்வொரு இந்தியரின் லட்சியங்களையும், கனவுகளையும் உயர்த்தியுள்ளது. இந்த மகத்தான சாதனை நமது விஞ்ஞானிகளின் இடையறாத அர்ப்பணிப்புக்கு சான்றாகும். அவர்களது உணர்வுக்கும், மதிநுட்பத்துக்கும் நான் தலைவணங்குகிறேன்’’ என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் பாராட்டு: விண்வெளித் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் பேசுகையில், ‘‘இது நிச்சயமாக இந்தியாவின் ஒரு மகத்தான தருணம். ஓர் இலக்கை நோக்கிய வரலாற்றுப் பயணத்தின் தொடக்கம். இந்தியாவை பெருமிதம் கொள்ளச் செய்த இஸ்ரோவுக்கு நன்றி. 60 ஆண்டுகளுக்கு முன்னர் விக்ரம் சாராபாய் கண்ட கனவை நினைவாக்கியுள்ள நாள். இந்தியாவின் தற்சார்பு நிலையை நிரூபித்துள்ளோம்‘‘ என்று தெரிவித்தார்.

நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) சந்திரயான்-2 விண்கலத்தை கடந்த 2019 ஜூலை 22-ம் தேதி விண்ணில்



செலுத்தியது. பல்வேறுகட்ட பயணங்களுக்கு பிறகு, சந்திரயான்-2 விண்கலம் 2019 செப்டம்பரில் நிலவின் சுற்றுப்பாதையை அடைந்தது.

எனினும், தொழில்நுட்பக் கோளாறால் லேண்டர் கலன் தரையிறங்காமல், நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ஆர்பிட்டர், நிலவின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

இதையடுத்து, சந்திரயான்-3 விண்கலத்தை ரூ.615 கோடியில் இஸ்ரோ வடிவமைத்தது. இந்த விண்கலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் 2-வது ஏவுதளத்தில் இருந்து எல்விஎம்-3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் மதியம் 2.35 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. ராக்கெட் ஏவுதலுக்கான 25.30 மணி நேர கவுன்ட்-டவுன் ஜூலை 13 மதியம் 1 மணிக்கு தொடங்கியது. தொடர்ந்து, எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட இறுதிக்கட்ட பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டனர்.

சந்திரயான்-3 விண்கலம் 3,895 கிலோ எடை கொண்டது. ஏற்கெனவே ஆர்பிட்டர், நிலவை சுற்றி வருவதால், இந்த முறை லேண்டர், ரோவர் கலன்கள் மட்டும் அனுப்பப்படுகின்றன. இவை 14 நாட்கள் நிலவில் ஆய்வு மேற்கொள்ளும். இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு பிறகு, நிலவில் விண்கலத்தை தரையிறக்கிய 4-வது நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தில் பணியாற்றியவர்கள் 54 பேர் பெண்கள் என்பது இப்போது தெரியவந்துள்ளது. இவர்கள் பொறியாளார்கள், விஞ்ஞானிகள் பதவியில் இருப்பவர்களாவர். மேலும் சந்திராயன் 3 திட்டத்தில் இணை இயக்குநர்கள், திட்ட மேலாளர்களாக பணி புரிந்துள்ளனர்.

சந்திரயான் 3 திட்டத்தின் இயக்குநர் மோகன் குமார். ராக்கெட் இயக்குநர் பிஜு சி தாமஸ். விண்கல இயக்குநர் டாக்டர் பி.வீரமுத்துவேல். இவர்களுடன் சேர்த்து 54 பெண்கள் இந்தத் திட்டத்தில் முக்கியப் பணியாற்றியுள்ளனர். இவர்களில் ஸ்ரீஹரிகோட்ட ராக்கெட் தளத்தில் வர்ணனையாளராக இருக்கும் பி.மாதுரி தான் வெளிப்படையாக அனைவருக்கும் தெரிந்த பெண்ணாக இருக்கிறார். மற்றவர்கள் திட்டத்தின் பின்னணியில் செயல்பட்டவர்கள் ஆவர்.


ரித்துகரிதால்ஸ்ரீவஸ்தவா சந்திரயான்-3 திட்டத்தின் முக்கிய முகமாக இருக்கிறார். இவர் இஸ்ரோவின் மூத்த விஞ்ஞானிகளில் ஒருவர். இவர் செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட மங்கள்யான் விண்வெளித் திட்டத்திலும் முக்கியப் பங்காற்றியவராவார். ரிது கரிதால் லக்னோ பல்கலைக்கழகத்தில் 1996-ஆம் ஆண்டு இயற்பியல் பயின்றார். அதன் பின்னர் பெங்களூரு இந்திய அறிவியல் மையத்தில் எம்.டெக் பயின்றார். 1997-ல் இஸ்ரோவில் இணைந்த இவர் பல்வேறு திட்டங்களிலும் தனது பங்களிப்பை செலுத்தியுள்ளார். 20-க்கும் மேற்பட்ட சர்வதேச இதழ்களில் இவரது ஆராய்ச்சிக் கட்டுரைகளை பிரசுரமாகியுள்ளன.

முன்னதாக, சந்திரயான்-3 விண்கலத்தின் பயணம் வெற்றியடைய பிரார்த்தனை செய்து, திருப்பதி மாவட்டம் சூலூர்பேட்டை அருகே உள்ள செங்காளம்ம பரமேஸ்வரி கோயிலில் இஸ்ரோ தலைவர் சோமநாத் சிறப்பு வழிபாடுகள் செய்தது குறிப்பிடத்தக்கது.

நிலவுக்கு இஸ்ரோவால் அனுப்பப்பட்ட சந்திரயான் 3 திட்டத்தில் மூளையாக செயல்படுபவர் ஒரு தமிழர்.

நிலவின் தென்துருவத்தில் ஆய்வு செய்வதற்காக சந்திரயான் 2 என்ற விண்கலத்தை கடந்த 2019 ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தியது. இது சுற்றுப்பாதையை சென்றடைந்த போதிலும் தொழில்நுட்ப கோளாறால் திட்டமிட்டபடி லேண்டர் கருவி தரையிறங்காமல் நிலவிலேயே மோதி செயலிழந்தது. இதன் பாகங்களை 2 மாதங்களாக இஸ்ரோவும் நாசாவும் தேடி வந்தன. ஆனால் சென்னையை சேர்ந்த சண்முக சுப்பிரமணியன் அதே ஆண்டு டிசம்பர் 3 ஆம் தேதி தனது தொலைநோக்கி மூலம் ரோவரின் பாகங்களை கண்டறிந்தார்.





சந்திரயான் 2 திட்டம் தோல்வியில் முடிந்த நிலையில் ரூ.615 கோடியில் சந்திரயான் 3 விண்கலத்தை இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம்) வடிவமைத்துள்ளது. இந்த விண்கலம் எல்விஎம் 3 எம் 4 ராக்கெட் மூலம் ஸ்ரீ ஹரிகோட்டாவில் உள்ள 2ஆம் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.

சந்திரயான் 3 மூலமாக நிலவின் மேற்பரப்பில் விண்கலத்தை தரையிறக்கும் 4ஆவது நாடு என்ற பெருமையை இந்தியா பெறும் என மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இந்த சந்திரயான் 3 திட்டம் குறித்து இந்தியாவே எதிர்பார்த்து வரும் நிலையில் இந்த திட்டத்திற்கு மூளையாக செயல்பட்டவர் குறித்து பெரும்பாலானோருக்கு தெரியாது. அதிலும் அவர் தமிழகத்தை சேர்ந்தவர். அவர் யார் என்பது குறித்த விவரங்கள் வெளியாகியுள்ளன.

இஸ்ரோ விஞ்ஞானியான வீரமுத்துவேல் என்பவர்தான் சந்திரயான்-3 மிஷனின் பின்னணியில் இருக்கிறார். விழுப்புரத்தை சேர்ந்தவர். இவர் சென்னை ஐஐடியில் படித்தவர். இவர் சந்திரயான்-2 திட்டத்திலும் முக்கிய பங்காற்றியுள்ளார். சந்திரயான்-2 திட்டத்தின் இயக்குநராக இருந்தவர் வனிதா. இவருக்கு பதிலாகத்தான் வீரமுத்துவேல் இந்த சந்திரயான்-3 திட்டத்திற்கு திட்ட இயக்குநராக செயல்பட்டு வருகிறார்.

வீரமுத்துவேலின் தந்தை பழனிவேல். இவர் தென்னக ரயில்வேயில் டெக்னீசியனாக பணியாற்றியவர். இவர்கள் விழுப்புரத்தில் உள்ள ரயில்வே குடியிருப்பில் வசித்து வந்தனர். வீரமுத்துவேல் விழுப்புரத்தில் உள்ள ரயில்வே பள்ளியில் படித்தார். பிறகு தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் மெக்கானிக்கல் என்ஜினியரிங்கில் டிப்ளமோ படித்துள்ளார். இதைத் தொடர்ந்து சென்னையில் தனியார் கல்லூரியில் பொறியியல் படிப்பை முடித்தார். சென்னை ஐஐடியில் ஆராய்ச்சி பட்டம் பெற்றார்.

அவருக்கு மத்திய அரசு துறைகளில் நிறைய வேலைகள் கிடைத்தன. ஆனாலும் அவர் அந்த பணிகளில் சேரவில்லை. கடந்த 2014 ஆம் ஆண்டு இஸ்ரோவில் விஞ்ஞானியாக சேர்ந்தார் வீரமுத்துவேல். இவர் இஸ்ரோ தலைமையகத்தில் விண்வெளி உள்கட்டமைப்பு அலுவலகத்தின் துணை இயக்குநராகவும் இருந்தார். கடந்த 2019ஆம் ஆண்டு சந்தியரான் 3 திட்ட இயக்குநராக வீரமுத்துவேல் நியமிக்கப்பட்டார்.

வீரமுத்துவேலின் சிறுவயது கனவு என்பது இஸ்ரோவில் விஞ்ஞானியாக வேண்டும் என்பதுதானாம்.

- **ராதிகா S**

# வனவிலங்கு பட்டியலில் இருந்து காட்டுப்பன்றியை அகற்ற வேண்டும்

## குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் தரையில் அமர்ந்து ஆர்ப்பாட்டம்

விருதுநகரில் நடந்த விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் காட்டுப்பன்றியை வனவிலங்கு பட்டியலில் இருந்து அகற்ற கோரியும், மாவட்ட வனத்துறையின் ஒத்துழையாமையை கண்டித்தும் விவசாயிகள் தர்ணாவில் ஈடுபட்டனர்.

கலெக்டர் அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில் கலெக்டர் ஜெயசீலன், வேளாண் இணை இயக்குனர் பத்மாவதி, நேர்முக உதவியாளர் நாச்சியார் அம்மாள், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் செந்தில்குமார், கால்நடைத்துறை இணை இயக்குனர் கோயில்ராஜா, தோட்டக்கலை துணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**கூட்டத்தில் நடந்த விவாதம்:**

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திரராஜா, தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் முருகன் ஆகியோர் வனவிலங்கு பட்டியலில் இருந்து காட்டுப்பன்றியை நீக்க வலியுறுத்தியும், குறைதீர் கூட்டம் நடத்தாமல், விவசாயிகளின் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் இருக்கும் வனத்துறையை கண்டித்தும், புலிகள் காப்பக துணை இயக்குனரை பணியிடமாற்றம் செய்ய கோரியும் தரையில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர். அதிகாரிகள் சமரசத்திற்கு பின் இருக்கைக்கு சென்றனர்.

**ஜெயசீலன் (கலெக்டர்):** வனத்துறை வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் காட்டுப்பன்றி பாதுகாக்கப்பட்ட இனமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அதை அழிக்கும் நடவடிக்கையை எடுக்க இயலாது. காட்டுப்பன்றியால் ஏற்படும் பயிர் சேத விபரங்கள் குறித்து வனத்துறை இயக்குனருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. வனத்துறை மூலம் வட்டார அளவிலான விவசாயிகளுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடத்தப்படும்.




**ராமச்சந்திரராஜா (ராஜபாளையம்):** நேரடி கொள்முதல் நிலையம் மூலம் பருத்தியை கொள்முதல் செய்வதாக கூறினீர்கள். இதுவரை நடக்கவில்லை. மா கமிஷன் கடை அரசே நடத்துவதாக கூறியது, அதையும் செய்யவில்லை. தேங்காய் கொள்முதலில் கொப்பரை கொள்முதல் செய்ய முடியாத நிலை உள்ளது. ஆகவே உரித்த தேங்காயை நேரடியாக வாங்க வேண்டும். இதற்காக விவசாயிகள் தேங்காய், பருத்தியை கொண்டு வந்திருந்தனர்.

**ராமமூர்த்தி (ஸ்ரீவில்லிபுத்தூர்):** கோயில் நிலங்களில் விளைநிலங்களுக்கு விவசாயிகளுக்கு பி.எம்., கிஷான் நிதி வழங்கப்படவில்லை. கடன் வசதி மாற்ற மானியங்கள் தெரியவில்லை

**நாராயணசாமி (தமிழ் விவசாயிகள் சங்கம்):** விருதுநகர் வீரசெல்லையாபுரத்தில் ரோட்டின் மேல் உள்ள விளைநிலத்தில் வண்டிப்பாதை ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. விவசாயம் செய்ய முடியவில்லை. மனு அளித்தும் நடவடிக்கை இல்லை. இதே போல் பல இடங்களில் வண்டிப்பாதைகள் மறிக்கப்பட்டுள்ளன.

சீவனேரி கண்மாய் நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்ற விவசாயிகள் புகாருக்கு ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். இவ்வாறு விவாதம் நடந்தது.

# பூமி சுழலும் அச்சு 80 செ.மீ. கிழக்கில் நகர இந்தியர்களும் ஒரு காரணமா?

பூமி சுழலும் அச்சு, 1993 ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டுவரை, கிட்டத்தட்ட 80 செ.மீ. கிழக்கு நோக்கி நகர்ந்திருக்கிறது.

இதுபற்றிய விவரங்கள் அமெரிக்கப் புவி இயற்பியல் சங்கத்தின் சஞ்சிகையில் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நிலத்தடி நீரை மனிதர்கள் அதிகமாக உறிஞ்சி எடுப்பது கடலின் மட்டத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக அந்த ஆய்வு கூறி யிருக்கிறது.


**இதற்கு ஒருவகையில் இந்தியர்களும் காரணமா?**

நிலத்தடியிலிருந்து உறிஞ்சி எடுக்கப்படும் நீர், காற்றில் ஆவியாகிறது, அல்லது ஆறுகளில் சென்று கலக்கிறது. “ஆவி நீராகியோ, அல்லது ஆறுகளில் கலந்த நீரோ, இறுதியில் கடலில்தான் சென்று கலக்கிறது,” என்கிறார் தென்கிரொயாவின் சோல் தெசியப் பல்கலைகழகத்தின் புவி அறிவியல் பேராசிரியரான கி–வெயான் சோ. இவர்தான் இந்த அறிக்கையின் தலைமை ஆய்வாளர்.
இதன் மூலம், நீர் “நிலத்தடியிலிருந்து கடல்களுக்கு இடம்பெயர்கிறது,” என்கிறார்.

பூமியின் சுழற்சியில் நீரால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்று 2016ஆம் ஆண்டே கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 2021ல், மற்றொரு ஆய்வு, பூமி அச்சின் சாய்கோணத்தினால், துருவங்களில் இருக்கும் பனி உருகி கடல்களில் கலப்பதைப்பற்றி ஆராய்ந்தது.

ஆனால், இதுநாள்வரை, நிலத்தடி நீர் எப்படி பூமி சுழல்வதை மாற்றும் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.




**இந்தியர்கள் நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சியதுதான் காரணமா?**


பூமிச் சுழற்சியின் மையப்புள்ளி தான் அதன் அச்சு. இது ‘துருவ நகர்வு’ (polar motion) எனும் நிகழ்வின் போது மாறுகிறது. அதாவது, பூமியின் மேற்பரப்பினை வைத்துப் பார்க்கும்போது, அச்சின் நிலை மாறுகிறது.

Polar Drift எனப்படும் இயற்கை நிகழ்வின்போது இது தானாக நடக்கிறது. பூமியின் திரள் பரப்பில் ஏற்படும் மாற்றத்தினால் இது நிகழும்.

ஆனால் 1990களிலிருந்து இது மனித செயல்பாடுகளால் நிகழ்வது கண்டறியப்பட்டுள்ளது.

பூமியில் நீர் பரவியிருக்கும் முறையில் மாற்றம் ஏற்படுவதால் நிகழும் மாற்றம் இது என்கின்றனர் விஞ்ஞானிகள். சுழலும் ஒரு பம்பரத்தின் மீது ஒரு கனமான பொருளை வைப்பதுபோலத்தான்.

நீர் இடம்மாற மாற, பூமியின் சுழற்சியும் சற்று மாறுபடும் என்கிறனர் விஞ்ஞானிகள்.






“உண்மையில், பூமி சுழலும் அச்சு வெகுவாக மாறுகிறது,” என்கிறார் சோ.

“எங்கள் ஆய்வின்படி, காலநிலை சார்ந்த காரணங்களில், நிலத்தடி நீர் மறுபகிர்வு தான் பூமியின் துருவ நகர்வுக்கு மிகப்பெரிய காரணம்,” என்கிறார்.

இந்த ஆய்வி படி, பூமத்திய ரேகை (mid-latitudes) மற்றும் அதற்கு அருகில் உள்ள பகுதிகளில் நிலத்தடி நீர் அதிக அளவில் உறிஞ்சப்படுவதுதான் சுழல் அச்சின் கோணத்தை மாற்றுவதில் அதிகப் பங்காற்றுகிறது.

அதிகமான நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டிருப்பது வடமேற்கு அமெரிக்காவிலும், வடமேற்கு இந்தியாவிலும் தான், என இந்த ஆய்வு கூறுகிறது.

நிலத்தடி நீரை உறிஞ்சுவதைக் குறைத்தால் இதைச் சரிசெய்யலாம், ஆனால் அதற்கு பல பத்தாண்டுகளுக்கு நிலத்தடி நீர் எடுப்பதைக் குறைக்க வேண்டும் என்கிறார் சோ.

ஆனால் பூமியின் நீர் மறுபகிர்வு செய்யப்படுவது காலநிலையில் மாற்றங்கள் கொண்டுவராது என்கிறார் சோ.

பூமி சுழலும் அச்சு ஓராண்டிற்கு பல மீட்டர்கள் நகர்வது இயற்கைதான். இதனால், மனித செயல்பாடுகளால், இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு மீட்டர் நகர்ந்திருப்பது காலநிலையை பாதிக்காது என்கிறார் சோ.


பூமியின் சுழல் அச்சுக் கோணத்தில் ஏற்படும் மாற்றத்திற்கு இதுவரை கண்டறியப்படாத காரணத்தைக் கண்டுபிடித்ததில் பெருமைப்படுவதாகச் சொல்கிறார் சோ.

ஆனால், “பூமியின் வாசியாகவும் என் குழந்தைகளுக்குத் தாயாகவும், நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவது கடல்மட்டம் உயர்வதற்கு மற்றுமொரு காரணம் என்பதை அறிந்து கவலைப்படுகிறேன்,” என்கிறார்.

கடும் வறட்சிக்காலங்கள், நிலத்தடி நீர் மேலும் உறிஞ்சப்படுவதற்கு வழிவகுக்கும். இது கடல்மட்டம் உயர்வதற்கும் வழிவகுக்கும்.

“நம்மில் பலர் கடலோர நகரங்களில் வசிக்கிறோம். எனது தலைமுறையில் இது பெரிய பிரச்னையில்லை. ஆனால் எனது குழந்தைகளின் தலைமுறையில், கடல் மட்டம் உயர்வது மிகப்பெரிய பிரச்னையாக உருவெடுக்கும்,” என்கிறார்.

- சரவணன் @ மணிகண்டன்



# இ வாகனங்களுக்கு இனி இலவச பர்மீட்.. முதல்வர் ஸ்டாலினின் அறிவிப்பு!

தமிழ்நாட்டில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாட்டில் மின்சார வாகனங்கள் அனைத்திற்கும் இலவச பர்மீட் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

உலகம் முழுக்க இ மின்சார வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இ மின்சார வாகனங்களை பயன்படுத்த மக்கள் அதிக அளவில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இந்தியாவில் மின்சார வாகனங்களின் உற்பத்தியில் தமிழ்நாடுதான் முன்னிலை வகித்து வருகிறது. ஏற்கனவே ஆட்டோமொபைல் சாதனங்களின் உற்பத்தியில் சென்னைதான் இந்தியாவின் டெட்ராய்டு என்று அழைக்கப்படுகிறது.

அந்த அளவிற்கு சென்னை முழுக்க கார், பைக் உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில்தான் உலகிலேயே மிகப்பெரிய பைக் உற்பத்தி ஆலையை ஓலா நிறுவனம் கிருஷ்ணகிரியில் அமைத்தது.

சார்ஜிங் பாயிண்ட் பயன்பாடு: இந்த நிலையில் தமிழ்நாட்டில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாட்டில் 100 இடங்களில் இ-வாகனங்களுக்கு சார்ஜிங் பாய்ண்ட் அமைக்க முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. வாகனங்களை நிறுத்தி சார்ஜ் செய்யும் விதமாக இந்த பாய்ண்ட் அமைக்கப்பட உள்ளது.

சாலை ஓரம் அரசு நிலத்தில் தமிழ்நாடு முழுக்க 100 இடங்களில் சார்ஜிங் பாய்ண்ட் அமைக்கப்படும். மின்சார வாரியம் சார்பாக இந்த சார்ஜிங் பாய்ண்ட் அமைக்கப்படும். மின்சார வாரியம் சார்பாக இங்கே மின்சாரம் வழங்கப்பட்டு அதில் சார்ஜிங் பாய்ண்ட் இயங்கும். வரும் காலங்களில் மக்கள்

பயன்பாட்டை பொறுத்து இந்த சார்ஜிங் பாயிண்ட்களின் எண்ணிக்கை உயர்த்தப்படும் என்று மின்சார வாரியம் அறிவித்துள்ளது.

**இலவச பர்மீட்:** இந்த நிலையில் தமிழ்நாட்டில் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பதை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாட்டில் மின்சார வாகனங்கள் அனைத்திற்கும் இலவச பர்மீட் வழங்குவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

பேட்டரி மூலம் இயக்கப்படும் அனைத்து பயணிகள் வாகனங்களுக்கும், மெத்தனால் அல்லது எத்தனால் எரிபொருளில் இயக்கப்படும் பயணிகள் வாகனங்களுக்கும், போக்குவரத்து துறையின் பர்மீட் கட்டணமின்றி வழங்க வேண்டும் என தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. தமிழ்நாட்டிற்கு வரும் மின்சார சுற்றுலா வாகனங்களுக்கும் இது பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

**ஓலா பைக்:** சமீபத்தில்தான் உலகிலேயே மிகப்பெரிய பைக் உற்பத்தி ஆலையை ஓலா நிறுவனம் கிருஷ்ணகிரியில் அமைத்தது. ஓலா பைக் உற்பத்தியும் நடைபெற்று வருகிறது. உலகிலேயே மிகப்பெரிய இருசக்கர மின்சார வாகன உற்பத்தி மையம் இது என்பது குறிப்பிடத்தக்கது. 500 ஏக்கர் பரப்பளவில் இந்த இருசக்கர உற்பத்தி மையம் அமைக்கப்பட்டு உள்ளது. இங்கே உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் ஓலா முழுக்க முழுக்க எலக்ட்ரிக் பவரில் இயங்கும் பைக் ஆகும். ஓலாவை தொடர்ந்து இ வாகனங்களின் உற்பத்தி தமிழ்நாடு நோக்கி திரும்ப தொடங்கி உள்ளது. பல்வேறு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் இ வாகனங்களை உற்பத்தி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றன.

**நிசான் நிறுவனம்:** இன்னொரு பக்கம் தமிழ்நாட்டில் ₹5300 கோடி முதலீடு செய்ய நிசான் நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு உள்ளது. நிசான் நிறுவனத்தின் உற்பத்தி ஆலை விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஏற்கனவே இருக்கும் நிசான் நிறுவன ஆலை விரிவுபடுத்தப்பட உள்ளது. முன்பு உள்ள ஆலையில் எஞ்சின் கார்கள் மட்டுமே உருவாக்கப்பட்டு வந்தன. தற்போது இங்கே புதிய எலக்ட்ரானிக் கார் உருவாக்க ஆலை அமைக்கப்பட உள்ளது.

சென்னையில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. எலக்ட்ரிக் கார்கள் உற்பத்தி செய்ய நிசான் நிறுவனத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. 5,300 கோடி மதிப்பில் முதலீடு செய்யப்படுவதால் 2,000 பேருக்கு சென்னையில் வேலைவாய்ப்பு உருவாகும்.

அதோடு ஆர் அண்ட் டி ஆராய்ச்சிகளும் இங்கே மேற்கொள்ளப்பட உள்ளது. இங்கே உற்பத்தி செய்யப்படும் நிசான் எலக்ட்ரிக் வாகனங்கள் உலகம் முழுக்க ஏற்றுமதி செய்யப்படும். நிசானின் எலக்ட்ரிக் வாகனங்கள் சென்னையில் மட்டுமே உற்பத்தி செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்நாடு முன்னேற்றம்:** தமிழ்நாடு கிட்டத்தட்ட எலக்ட்ரிக் வாகனங்களின் தலைநகராக உருவெடுக்க தொடங்கி உள்ளது. கொரோனாவிற்கு பின்பாக 2022ல் தமிழ்நாட்டில் மிக அதிக அளவில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டு மட்டும் தமிழ்நாட்டில் 1 லட்சம் கோடிக்கும் மேல் முதலீடு செய்யப்பட்டு உள்ளது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் பொருளாதார ரீதியாக கடுமையான பின்னடைவை சந்தித்த போதும், கொரோனாவிற்கு பின் பல்வேறு மாநிலங்கள் கடுமையாக கஷ்டப்பட்ட போதும் கூட தமிழ்நாட்டில் முதலீடுகள் குவிந்துள்ளன.

அமெரிக்காவை சேர்ந்த Ford நிறுவனம் சென்னையில் இருந்து வெளியேறிய பின்பும் கூட சென்னையில் முதலீடுகள் சுணங்காமல் அதிகரித்துள்ளன. 2022ம் வருடம் தமிழ்நாடு மொத்தம் 60 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டது. இதில் 1.25 லட்சம் கோடி ரூபாய் வரை முதலீடு செய்யப்பட்டது. தற்போது செய்யப்பட்டு உள்ள நிசான் முதலீடு 2023ல் செய்யப்பட்ட மிகப்பெரிய முதலீடாக பார்க்கப்படுகிறது.

- D. பாமா



# பயிர்களுக்கு கந்தகத்தின் நன்மைகள்!

நைட்ரஜனைப் போன்றே கந்தகமும் பயிர்களுக்கு வேண்டிய அடிப்படையான சத்து. இதன் பெயர் லூயி பாஸ்டரின் நினைவாக உள்ள நுண்ணுயிர் சீரினத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளது.

இது மெத்தியோனைன், சிஸ்டைன் உள்ளிட்ட பல அமினோ அமிலங்களை உண்டாக்குவதில் முதன்மையான பங்கு வகிக்கிறது. இந்த அமினோ அமிலங்கள் செடிகளுக்கும் விலங்குகளுக்கும் அடிப்படையாகப் பயன்படுகின்றன. ஒரு நல்ல தரமான புரதத்தில் நைட்ரஜன் – கந்தக சதவீதம் 15:1 என்ற அளவில் இருக்க வேண்டும். இவை நைட்ரஜனைப் போல மிகவும் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன. இதன் பற்றாக்குறையும் நைட்ரஜன் பற்றாக்குறையும் ஏறத்தாழ ஒரே மாதிரியாகவே இருக்கும்.

உழவர்களின் சிக்கலுக்கு விடியல்

கந்தகம் மண்ணில் கசிந்து, கிட்டாத நிலைக்கு வேகமாகச் சென்றுவிடுகிறது. குறிப்பாக மணல் பாங்கான உப்புத்தன்மையுள்ள மண்ணில் இது அதிகம் நிகழ்கிறது. எனவே, ஆண்டுதோறும் கந்தகத்தைக் கொடுக்க வேண்டிய நிலை உருவாகிறது. ஆனால், இதற்கான விலையின் காரணமாக உழவர்களால் நிலத்துக்குக் மிகக் குறைந்த கந்தகத்தையே கொடுக்க முடிகிறது.

இந்தச் சிக்கலைத் தீர்க்கும் வகையில் சந்த்ரா (1998) எனும் அறிவியலாளர், அசிட்டோபாக்டர் பாஸ்டியுரியேனஸ் என்ற நுண்ணுயிரியை புவனேஸ்வரத்தில் உள்ள மண்டல உயிரியல் மேம்பாட்டு மையத்தில் வைத்துப் பிரித்து அதை மேம்படுத்தியுள்ளார். இது கந்தகத்தைச் சுரந்து, பயிர்கள் எடுத்துக்கொள்ளும் வகையில் கொடுக்கிறது. உயிர்மப் பொருட்களில் உள்ள கந்தகத்தில் 70–90 சதவீதம் இவ்வாறு உருவாக்க முடிவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வழக்கமாக ஈரமண்டலப் பகுதிகளில் உள்ள சாகுபடி நிலங்களில் மேற்பரப்பில் 5 முதல் 10 சதவீதம் மட்டுமே காணப்படுகிறது. எஞ்சியவை 12 முதல் 14 அங்குல ஆழத்தில் இறங்கிவிடுகிறது. அத்தோடு இரும்பு, அலுமினியம் போன்றவற்றின் ஆக்சைடுகளாக மாறியும் காணப்படுகிறது. இவை பயன்படுத்த முடியாத நிலையில்

உள்ள சத்துக்களைப் பயன்படுத்தும் நிலைக்கு மாற்றுவதற்கு உதவுகிறது. அசிட்டோபாக்டர் ஒரு குறுக்கத்துக்கு 250 கிராம் என்ற அளவில் பயன்படுத்தும்போது கந்தக அளவை காய்கறிகள், வெங்காயம், பருத்தி, பழங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்ற பல பயிர்களில் அதிகப்படுத்தியதை அனுபவத்தில் கண்டறிய முடிந்தது.

**பாஸ்பரஸ்... பல விதம்**

நைட்ரஜனுக்கு அடுத்ததாக, பாஸ்பரஸ், செடிகளின் ஒருங்கிணைந்த ஊட்டங்களில் முக்கியமான பங்கை வகிக்கிறது. பயிர்களின் விளைச்சல் திறனில், கட்டுப்படுத்தக்கூடிய பங்கை வகிக்கிறது. பெரும்பாலான மண், கரையாத நிலையில் உள்ள கனிம பாஸ்பரஸ் சத்தைக் கொண்டிருந்தபோதிலும், இவை பாஸ்பரஸ் பென்டாக்சைடு என்ற நிலையில் இருந்தால்தான் பயிர்களுக்குப் பயன்படும்.

பாஸ்பேட்டுகள் பல வடிவங்களில் இருக்கின்றன. பயிர்களின் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது மோனோ கால்சியம் பாஸ்பேட். இது தண்ணீரில் கரையக்கூடியது. சூப்பர் பாஸ்பேட்டில் பெரும் பங்காற்றுகிறது. டைகால்சியம் பாஸ்பேட், நீரில் சிறிதளவு கரையக்கூடிய நிலையில் உள்ள மற்றொரு ஊட்டமாகும். வேதி உரங்களில் பல்வேறு வகை பாஸ்பரஸ் தரப்படுகிறது. கார வகை மண்ணில் ட்ரைகால்சியம் பாஸ்பேட் என்ற வடிவிலும், ‘ஹைட்ராக்கியாபடைட்’ என்ற வடிவில் எலும்புகளிலும், ‘அப்படைட்’ என்ற வடிவத்தில் பாறைத் தாதுக்களிலும் மணிசத்து, கூட்டுப்பொருட்களாகக் கிடைக்கிறது. அமிலத் தன்மையுள்ள மண்ணில் இரும்பு, அலுமினியம் ஆகியவற்றின் கூட்டுப்பொருளாகக் கிடைக்கிறது.

எப்படியிருந்த போதிலும் பாஸ்பரஸ் வேதி உரங்களை மண்ணில் பதப்படுத்திய போதிலும், இரும்பு, அலுமினியம், கால்சியம் ஆகியவற்றுடன் 80 முதல் 90 சதவீதம் இணைந்தே இருக்கும். மற்ற மணிச்சத்து வடிவங்களான, உயிர்ம பாஸ்பரஸ், காம்பி ரிசெஸ்பிடின், பாஸ்போலிப்பிட்ஸ், உட்கரு அமிலங்கள், பாஸ்போரிலேட்டட் சர்க்கரை, தழைக் கழிவுகள் சிதையும்போது கிடைக்கும் உடன்நொதிமங்கள் ஆகியவை உள்ளன.

மண்ணில் உள்ள மொத்த பாஸ்பரஸில் 5 முதல் 85 சதவீதம்வரை உயிர்ம பாஸ்பரஸாக உள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலையான மணிச்சத்து நுண்ணுயிர்கள், பூஞ் சாளங்கள் ஆகியவற்றின் உதவியால் திரட்டி பயிர்களுக்குத் தரமுடியும். இவை மணிச்சத்தைக் கரைக்கும் நுண்ணுயிர்கள் என்ற பொதுவான பெயரால் அழைக்கப்படுகின்றன. இவை கரையாத நிலையிலுள்ள கனிம பாஸ்பேட்டு கூட்டுப்பொருட்களை, மாலிக் அமிலம், குளுகானிக் அமிலம், குளுடாரிக் அமிலம், கிளைகோசாலிக் அமிலம், சக்னிக் அமிலம், ஃபியுமாரிக் அமிலம், மலானிக் அமிலம், சிட்ரிக் அமிலம், டார்டாரிக் அமிலம், லாக்டிக் அமிலம், கெட்டோகுளுடாரிக் அமிலம், கெட்டோபியுட்ரிக் அமிலம் போன்ற உயிர்ம அமிலங்களின் செயல்பாடுகளால் கரையும் பொருட்களாக மாற்றுகின்றன.

**மண்ணில் கலக்கும் மணிச்சத்து**

சூடோமோனஸ், மைக்ரோகாக்கஸ், பாசில்லஸ், பிளாவோ பாக்டீரியம், பெனி சிலியம், பியுசாரியம், ஸ்கெலரோடியம், அஸ்பெர்கிலம் ஆகியவை நுண்ணுயிரினங்கள்.

மிகத் திறனுடன் வேலை செய்யும் பல நுண்ணுயிர்கள் தென்னாட்டு மண்ணில் இருந்து கண்டறியப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்டுவிட்டன. அவை சூடோமோனஸ் ஸ்டாரியட்டா, பாசில்லஸ் பாலிமிக்சா, பாசில்லஸ் மெகாதிரியம். இந்தத் திறன்மிக்க நுண்ணுயிர்கள் தரையிலும், மலைப் பகுதியிலும் உள்ள மண்ணில் உள்ள கரையாத மணிச்சத்தைக் கரைத்துக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன.

முசோரி, உதய்பூர், மடூன், சோர்டான் ஆகிய இடங்களில் பாறை பாஸ்பேட்டுகளையும் தங்களது நொதிமங்களைக் கொண்டு கரைக்கக்கூடிய திறனை நுண்ணியிரிகள் கொண்டுள்ளன. இவை 1:1 என்ற அளவில் மண்ணில் கலந்து இருக்கும்போது 2 முதல் 9 என்ற அளவு அமில–காரத் தன்மையிலும் வாழக்கூடிய திறனைப் பெற்றுள்ளன. இவை மண்ணில் கலந்தவுடன் மணிச்சத்தைக் கரைக்கும் வேலையைத் தொடங்குகின்றன.

- K. சுப்புலட்சுமி

# வரலாறு காணாத உச்சத்தில் தக்காளி விலை!

தக்காளி ஒரு மாதம் முன்புதான், மகாராஷ்டிரத்தில் போதிய விலை கிடைக்கவில்லை என்பதால் தக்காளி விவசாயிகள் தங்களது சாகுபடியை சாலையில் கொட்டி ஆத்திரத்தை வெளிப்படுத்தினார்கள். இப்போது பார்த்தால், தக்காளியின் விலை சில மாநிலங்களில் கிலோவுக்கு ரூ. 135ஐ தாண்டியிருக்கிறது. தக்காளியின் விலை மட்டுமல்ல, வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், இஞ்சி, பச்சை மிளகாய் உள்ளிட்ட அன்றாட உபயோகக் காய்கறிகளின் விலையும் உயர்ந்த வண்ணம் இருக்கின்றன. தக்காளியின் விலை கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 66% அதிகம் என்றால், வெங்காயம் (7.5%), உருளைக்கிழங்கு (4.5%) போன்றவற்றின் விலையும் கடந்த ஆண்டைவிட அதிகமாகவே காணப்படுகின்றன.

காய்கறிகள் மட்டுமல்ல, பருப்பு வகைகளின் விலையும் கடுமையாக அதிகரித்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும்போது, துவரம்பருப்பின் விலை 7.8% அதிகரித்து கிலோவுக்கு ரூ. 130.75ஐ தொட்டிருக்கிறது. இதுபோல, காய்கறி, தானியங்கள் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் திடீர் விலை உயர்வுக்குப் பருவமழை முக்கியமான காரணம்.

பருவமழைப் பொழிவால் குறித்த நேரத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு சரக்குகளைக் கொண்டுபோய் சேர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல, குறித்த நேரத்தில் பருவமழை பெய்யாததால், சில பகுதிகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக தக்காளி பயிரிடப்படும் கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் தக்காளி விளைச்சல் பருவமழையால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சந்தைக்கு வரத்து குறைந்தது. தேவைக்கேற்ற விளைச்சல் இல்லாததால் விலைகள் அதிகரித்தன.

கிழக்கு பசிபிக் சமுத்திரத்தின் மேல்பரப்பில் அளவுக்கதிகமான வெப்பம் காணப்படுவதால் உருவாகும் காற்று மண்டலத் தாக்கத்துக்கு 'எல் நினோ' என்று பெயர். அதனால் இந்தியாவில் குறைந்த அளவு பருவமழை, தொடர்ச்சியாக இல்லாமல் விட்டுவிட்டுப் பெய்வது போன்றவை காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது.



சீராக இல்லாத பருவமழையும், குறித்த நேரத்தில் விளைபொருள்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு எடுத்துச் செல்ல முடியாததும் மட்டுமே, தொடர்ந்து அடிக்கடி ஏற்படும் இதுபோன்ற காய்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணங்கள் என்று சொல்லிவிட முடியாது. இந்தியாவில் காணப்படும் பல்வேறு தட்பவெப்பநிலை, வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பயிர்களையும், வெவ்வேறு பருவத்தில் வெவ்வேறு பகுதிகளில் அவற்றைப் பயிரிடுவதையும் நமக்கு வழங்கியிருக்கிறது. ஒரு பகுதியில் விவசாயம் பொய்த்தால் இன்னொரு பகுதியின் விளைச்சலால் அதை எதிர்கொள்ளும் வாய்ப்பு நமக்கு உண்டு.

உற்பத்தியான காய்கறிகளை அழுகிவிடாமல் சேமித்து வைக்கத் தேவையான குளிர்பதனக் கிடங்குகள் இந்தியாவில் இல்லை. இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும், மூலைமுடுக்குகள் வரை விளைபொருள்களை எடுத்துச் செல்லப் போதுமான சரக்குக் கையாளும் வசதியும் நம்மிடம் இல்லை. கடந்த 70 ஆண்டுகளாக இது குறித்துக் கவலைப்படாமல் இருந்துவிட்டு, இப்போதுதான் விழித்துக் கொண்டு அதற்கான முயற்சியில் இறங்கி இருக்கிறோம்.

எந்தப் பகுதியில் எந்தக் காய்கறிகள் எந்தப் பருவத்தில் விளைகின்றன; எந்தப் பகுதியில் எந்தக் காய்கறிகள் எந்த மாதங்களில் தேவைப்படுகின்றன இதுபோன்ற தரவுகளை நாம் இன்னும்கூட சேகரித்தபாடில்லை. இந்தியாவில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற மூன்று மத்திய, 64 மாநில, நான்கு 'நிகர்நிலை' வேளாண் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றை இந்தப் பணியில் ஈடுபடுத்தி, தரவுகளைச் சேகரித்து முறையான திட்டமிடலால் இந்தப் பிரச்னையை எதிர்கொள்ள முடியும்.

- வீ. அய்யனார்

# சர்வதேச புலிகள் தினம்




சர்வதேச புலிகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 29 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. புலிகளின் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.

2010 ஆம் ஆண்டு சர்வதேச புலிகள் தினம் அறிமுகப்படுத்தப்பட்டது. புலிகள் அழிவின் விளிம்பில் இருப்பதால், நிலைமை மோசமடைவதைத் தடுக்க ரஷ்யாவில் நடந்த செயின்ட் பீட்டர்ஸ்பர்க் புலிகள் மாநாட்டில் பல நாடுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

சட்டவிரோத வனவிலங்கு வேட்டை, வனவிலங்கு வர்த்தகம், மனித–வனவிலங்கு மோதல், வாழ்விட இழப்பு ஆகியவற்றுக்கு எதிராக அனைத்து நாடுகளும் நடவடிக்கை எடுத்தால் இந்த உயிரினங்களை அழிவிலிருந்து காப்பாற்ற முடியும். இந்த நாள் புலிகளின் வாழ்விடங்களைப் பாதுகாக்கவும் விரிவுபடுத்தவும் முயல்கிறது. சர்வதேச புலிகள் தினம், இயற்கைக்கான உலகளாவிய நிதியம், விலங்குகள் நலனுக்கான சர்வதேச நிதியம் மற்றும் ஸ்மித்சோனியன் நிறுவனம் உட்பட பல சர்வதேச அமைப்புகளால் அனுசரிக்கப்படுகிறது.

2017 இல் இரண்டு புதிய புலி கிளையினங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. மிஹிசிழி ஆனது கண்டப் புலி மற்றும் சுந்தா தீவு புலியை புலி கிளையினங்களாக அங்கீகரிக்கிறது.

**இந்தியாவும் புலிகளும்**

1948 ஆம் ஆண்டு தேசிய சின்னங்கள் அறிவிக்கும் போது இந்திய தேசிய விலங்காக இருந்தது ஆசிய சிங்கம். 1973 இல் தான் உலக அளவில் அதிக அளவில் புலிகள் வாழும் இந்தியாவில் அதை பாதுகாக்கும் எண்ணத்தோடு வங்காள புலியை தேசிய விலங்காக அரசு மாற்றியது. மேலும், 1973 இல் குறைந்து வரும் புலிகளின் எண்ணிக்கையை மீட்டெடுக்க இந்தியா புலிகள் திட்டத்தை (project tiger) அறிமுகப்படுத்தியது.இந்தியாலும் 16 மாநிலங்களில் புலிகள் வாழ்கின்றன.

**2010இல் திட்டம் TX2 கொண்டுவரப்பட்டது**

புலிகள் அதிகம் காணப்படும் 13 நாடுகள் இணைந்து காட்டுப் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க (TX2) உறுதியளித்தன. உலகப் புலிகள் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 70% இந்தியாவில்தான் உள்ளது.

- B. சரவணன்

# கடலோர மண்டல மேலாண்மை திட்ட வரைவு குறித்து ஆகஸ்ட் 4ம் தேதிக்குள் மக்கள் கருத்து தெரிவிக்கலாம்:

**தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை தகவல்**



கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைவு குறித்த ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் ஆகஸ்ட் 4ம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019–ன்படி, இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான, நீடித்த கடற்கரை மேலாண்மைக்கான தேசிய மையம் என்ற ஒன்றிய அரசின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துக்கு தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்டம் தயாரிக்கும் பணி சுற்றுச்சூழல் துறை மூலம் வழங்கப்பட்டது.

இத்திட்டம் தயாரிக்கும் பணி வழங்கப்பட்டு, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிக்கை கடந்த 2019 வழிமுறைகள் படி தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைவு மற்றும் நிலப்பயன்பாட்டு வரைபடங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைவு குறித்து அரசுத் துறைகள், தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் பொதுமக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை அறிய கடந்த 16ம் தேதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் இணையதளத்திலும் (//www.ervironment.tn.gov.in) மற்றும் இத்துறையின் இஎன்விஐஎஸ் மையத்தின் இணையதளத்திலும் (//www.tnenvis.nic.in) வெளியிடப்பட்டுள்ளது.

எனவே நிறுவனங்கள், பொதுமக்கள், தன்னர்வத்தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவினரும் கடலோர மண்டல மேலாண்மைத் திட்ட வரைவு குறித்த தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின் இத்திட்டம் இணையதளத்தில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் அதாவது ஆகஸ்ட் 4ம் தேதிக்குள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் எழுத்து மூலம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறைக்கு அனுப்பலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்படுள்ளது.

- தமிழ் மணி


**பேனா குரல்**
**PENA KURAL**
தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் : நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், பா.சரவணன், A.தங்கராஜ், K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன், கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக், தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ், பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
பேனா குரல்
3/885, பிள்ளையார் கோவில் தெரு, மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை, தமிழ் நாடு, இந்தியா - 600097.


தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



Printed, Published and Owned by: **NV SIVASHANKAR** | Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: **RATHIKA S**


V.AYYANAR
9884166636
NO.3/885,PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097
DEEPSHIKA AUTO WORKS
ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE
email: deepshikaautoworks@gmail.com


BM
Electrical, Plumbing
&
Air Conditioner Work
B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097


வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance
Available
Rs.19,999/-
Rs.12,999/-
Compo Offer
Rs.2250/-
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.